# பரிபூரண ஜீவன்

# PARIPOORANA JEEVAN

## பாவிகளை இரட்சிக்க
## கிறிஸ்து இயேசு
## உலகத்தில் வந்தார்

I தீமோ. 1:15



THE TAMIL DISTRICT COUNCIL OF THE SIAG

November - December 2022
Volume : 62

ஆண்டு சந்தா ₹ 100/-
Issue : 6

## SIAG 38th Biennial General Conference - Bangalore

















## ஆண்கள் ஐக்கிய மாநில மாநாடு - மதுரை










ஆசிரியரிடமிருந்து........!



# கிறிஸ்துமஸ் காலம்

இயேசு கிறிஸ்துவின் உன்னத நாமத்தில் பரிபூரண ஜீவன் வாசகர்கள் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்களை தெரிவிக்கிறேன். வருடத்தின் இறுதியில் வந்திருக்கும் நாம், இந்த வருடம் முழுவதும் தேவன் செய்த நன்மைகளை நினைத்து அவருக்கு நன்றி செலுத்துவோம்!

நாம் அனைவரும் அறிந்தபடி வருட இறுதியில் உலகம் முழுவதும் ''கிறிஸ்துமஸ்'' மிகுந்த சந்தோஷத்தோடும், ஆரவாரத்தோடும் கொண்டாடப்படுகிறது. கிறிஸ்துமஸ் ஒரு பரபரப்பான காலம். புதிய ஆடைகள், சுவை மிக்க உணவு, கேக், இசை, பாடல்கள், கொண்டாட்டம், பரிசுகள், வீடுகள் தோறும் அலங்கார நட்சத்திரங்கள் என காணப்படுகிற காலமாக விளங்குகிறது. நல்லது! கிறிஸ்துமஸ் காலம் போல எந்தக் காலமும் இவ்வளவு மகிழ்ச்சி தருவதில்லை. ஆனால் வேதாகமத்தில் நாம் பார்க்கும் முதல் கிறிஸ்துமஸ் சற்று வித்தியாசமானது. அதுகுறித்து சற்று தியானிப்போம். அதை நாமும் பின்பற்றுவோம்!

## 1. இது தேவனை மகிமைப்படுத்த வேண்டிய காலம்
## It is a time of GLORIFYING

இயேசுவின் பிறப்பு, பரலோகத்தையும், பூலோகத்தையும் மகிழ்ச்சிக்குள்ளாக்கியது. பரம சேனையின் திரள் உன்னதத்திலிருந்து “தேவனுக்கு மகிமை” என்று சொல்லி தேவனைத் துதித்தார்கள் (லூக்கா 2:13). ஞானிகள் மிகுந்த சந்தோஷத்தினால் நிரம்பி, இயேசுவைப் போற்றி, ஆராதித்து அவரைப் பணிந்துக் கொண்டார்கள் (மத்தேயு 2:10,11). சிமியோன் இயேசுவை தன் கைகளில் ஏந்திக்கொண்டு தேவனை ஸ்தோத்தரித்தான் (லூக்கா 2:27,28). விதவையான அன்னாள் இயேசுவைப் பார்த்தபோது கர்த்தரை புகழ்ந்தாள் (லூக்கா 2:38). நாமும் தேவன் அருளிய சொல்லி முடியாத ஈவுக்காக அவரைத் துதிக்க வேண்டும் (2 கொரி.9:15). இந்த கிறிஸ்துமஸ் நாட்களில் நம் இருதயம் தேவனைத் துதிப்பதிலும், ஆராதிப்பதிலும், அவருக்கு நன்றி சொல்லுவதிலும் நிறைந்திருக்கட்டும்! நம்முடைய ஆத்துமா அவரை மகிமைப்படுத்தி, நம்முடைய ஆவி இரட்சகராகிய தேவனில் களிகூரட்டும் (லூக்.1:46-47)!

## 2. இது ஒரு கொடுத்தலின் காலம்
## It is a time of GIVING

தேவன் தம்முடைய ஒரே பேரான குமாரனாகிய இயேசுவை நமக்காகத் தந்தருளினார் (யோவான் 3:16). இதுவே கிறிஸ்துமஸ். குமாரனாகிய இயேசு, நம்முடைய பாவங்களுக்காக தம்முடைய ஜீவனையே கொடுத்தார் (மத்தேயு 20:28). இப்படி தம்மையே நமக்காக தந்து அன்பு கூர்ந்த இயேசுவுக்கு நம்மையே அவருக்குக் கொடுப்பதைத்

தவிர வேறு என்ன செய்ய முடியும்! உங்கள் இருதயத்திலும் வாழ்க்கையிலும் அவருக்கு இடம் கொடுங்கள் (நீதி.23:26; வெளி.3:20). அவரை இரட்சகராக ஏற்றுக்கொண்டு அவருக்காக வாழ தீர்மானியுங்கள். இதோ, இப்பொழுதே அனுக்கிரக காலம், இப்பொழுதே இரட்சணியநாள் என்று வேதம் கூறுகிறது (2.கொரி. 6:2).

இயேசு பிறந்தபோது சாஸ்திரிகள் வந்து, பொன், தூபவர்க்கம் மற்றும் வெள்ளைப் போளத்தையும் காணிக்கையாக கொடுத்தார்கள் என்று வாசிக்கிறோம் (மத்.2:11). ராஜாவாக பிறந்திருக்கிறவரை பார்க்க வந்த அவர்கள் மகிழ்ச்சியோடு அவருக்கு சிறந்ததை கொடுத்தார்கள். நாமும் கர்த்தருக்கென்று, அவருடைய பணிக்காக கொடுப்போம். சபையில் இந்த நாட்களில் நடைபெறும் ஊழியங்களை உற்சாகமாக தாங்குவோம்!

மேலும், ஏழைகளுக்கும் திக்கற்றோருக்கும் உதவி செய்கிற நாட்களாக இந்த கிறிஸ்துமஸ் நாட்கள் மாறட்டும். நம்முடைய பணம், பொருளை குறையுள்ளவர் களுக்கு பகிர்ந்தளிப்போம்! இயேசுவின் அன்பை வெளிப்படுத்துவோம். நீங்கள் விருந்து செய்யும் போது தரித்திரரையும், முடவர்களையும், சப்பாணிகளையும், குருடர்களையும் அழைத்து உபசரியுங்கள். அப்பொழுது நீங்கள் ஆசீர்வதிக்கப் படுவீர்கள் என்று இயேசு சொன்னார். நீதிமான்கள் உயிர்தெழுதலில் அதின் பலனை பெறுவீர்கள் (லூக்கா 14:12-14). ஆகவே தரித்திரரை நினைத்துக்கொள்ளுவோம் (கலா.2:10). மிகவும் சிறியவர்களாகிய இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார் (மத்.25:40)!

## 3. இது நற்செய்தி அறிவிக்கும் காலம்
## It is a time of GOOD NEWS

கிறிஸ்துமஸ், எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தி. இந்த இயேசுவின் பிறப்பின் நற்செய்தியை தூதர்கள் மேய்ப்பர்களுக்கு அறிவித்தார்கள் (லூக்கா 2:10). மேய்ப்பர்கள் தாங்கள் கேள்விப்பட்ட செய்தியை அனைவருக்கும் பிரசித்தம் பண்ணினார்கள் என்று வேதம் கூறுகிறது (லூக்கா 2:17). தேவ ஜனமே, இன்று நாம் இயேசுவின் இரண்டாம் வருகையைக் குறித்து பேசுகிறோம். ஆனால் நம் தேசத்தில், மாநிலத்தில், பட்டணத்தில், கிராமத்தில் இன்று அநேகருக்கு அவரின் முதல் வருகையை பற்றியே தெரியவில்லை. இயேசு இந்த உலகிற்கு மனிதனாக வந்த நோக்கத்தையும், அவர் நமக்காக சிலுவையில் செய்து முடித்த காரியத்தையும் இந்த உலகிற்கு எடுத்துரைப்பது நம்முடைய தலையாயக் கடமையாகும்! ஒரு சிலருக்காவது இயேசுவைக் குறித்து இந்த கிறிஸ்துமஸ் நாட்களில் பகிர்ந்து கொள்ளுங்கள். உங்கள் நண்பர்கள், அயலகத்தார், அண்டை வீட்டார் ஆகியோருக்கு இயேசுவை அறிமுகம் செய்யுங்கள்.அவரைக் குறித்து கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? (ரோமர் 10:14) என்று வேதம் கூறுகிறது. இயேசுவை அறிய ஆவலாய் இருப்போரை சபைக்கு அழைத்து வாருங்கள். இயேசு பிறப்பின் நற்செய்தியை அறிவிக்கும் காலமாக இந்த 2022 கிறிஸ்துமஸ் நாட்கள் அமையட்டும்! கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

**Rev. Dr. ஜெரி டேனியல்**
(ஆசிரியர், பரிபூரண ஜீவன்)
மண்டல தலைமைப் போதகர், திருச்சி தெற்கு மண்டலம்.



# இயேசு கிறிஸ்துவின் வருகையும் உலக முடிவும் அதிசீக்கிரம்

Rev. P.S. ராஜமணி

இயக்குநர் - அகில இந்திய விஷன் 2020

...????ர்??

**2000 வருடம் முடிந்துவிட்டதே ஏன் இன்னும் இயேசு கிறிஸ்து வரவில்லை**

இந்தக் கேள்வி அநேகருடைய உள்ளத்தில் இருக்கிறது. இயேசு கிறிஸ்துவில் நம்பிக்கை வைத்து வாழ்ந்த கோடிக்கணக்கான பரிசுத்தவான்கள் எழுப்பிய கேள்விதான் இது. முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் தங்கள் வாழ்நாளிலேயே இயேசு கிறிஸ்து வந்து விடுவார் என்று நம்பியிருந்தனர். அவர்களுக்குப் பின் ஒவ்வொரு நூற்றாண்டுகளிலும் வாழ்ந்த பரிசுத்தவான்கள் இந்த எதிர்பார்ப்புடன் வாழ்ந்தனர். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து ஏன் தாமதிக்கிறார்?

**1. எல்லாரும் மனந்திரும்ப எதிர்பார்க்கிறார்**

தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல், ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார் (2 பேதுரு 3:9).

**2. தீர்க்கதரிசனங்கள் பல நிறைவேற வேண்டியிருந்தன**

உலகத்தோற்ற முதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள் எல்லாம் நிறைவேறித் தீருங்காலங்கள் வருமளவும் பரலோகம் அவரை ஏற்றுக்கொள்ளவேண்டும் (அப்.3:21).

**3. நற்செய்தி உலகமெங்கும் சந்திக்கப்பட வேண்டும்**

ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும் (மத்.24:14).

**4. நமக்காக ஒரு மாளிகையை கட்டிக் கொண்டிருக்கும் வேலை முடியவில்லை**

என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன் (யோவான் 14:2).

**5. சபையின் காலம் - புறஜாதிகளின் காலம் நிறைவேற வேண்டும்**

மேலும், சகோதரரே, நீங்கள் உங்களையே புத்திமான்களென்று எண்ணாதபடிக்கு ஒரு இரகசியத்தை நீங்கள் அறியவேண்டுமென்றிருக்கிறேன்; அதென்னவெனில், புறஜாதியாருடைய நிறைவு உண்டாகும்வரைக்கும் இஸ்ரவேலரில் ஒரு பங்குக்குக் கடினமான மனதுண்டாயிருக்கும் (ரோமர் 11:25).

**6. அந்திகிறிஸ்து வெளிப்பட வேண்டும்**

அன்றியும், சகோதரரே, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வருகையையும், நாம் அவரிடத்திலே சேர்க்கப்படுவதையுங்குறித்து, நாங்கள்

உங்களை வேண்டிக்கொள்ளுகிறது என்னவென்றால், ஒரு ஆவியினாலாவது, வார்த்தையினாலாவது, எங்களிடத்திலிருந்து வந்ததாய்த் தோன்றுகிற ஒரு நிருபத்தினாலாவது, கிறிஸ்துவினுடைய நாள் சமீபமாயிருக்கிறதாகச் சொல்லப்பட்டால், உடனே சஞ்சலப்படாமலும் கலங்காமலும் இருங்கள்.

எவ்விதத்தினாலும் ஒருவனும் உங்களை மோசம்போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் விசுவாச துரோகம் முந்தி நேரிட்டு, கேட்டின் மகனாகிய பாவமனுஷன் வெளிப்பட்டாலொழிய, அந்த நாள் வராது (2தெச.2:1-3).

மேற்கூறிய வசனங்களிலிருந்து என்ன விளங்கி கொள்கிறோம். எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று பொறுமையுடனிருக்கிறார். அவர் வருகைக்கு முன் நடைபெற வேண்டிய தீர்க்கதரிசனங்கள் பல நிறைவேற வேண்டும். இயேசு கிறிஸ்துவின் நற்செய்தி உலகமெல்லாம் பிரசங்கிக்கப்பட வேண்டும். எனவே ஆண்டவர் தாம் சொன்ன வாக்குத்தத்தத்தின்படி நிச்சயம் வருவார்.

**இயேசுவின் வருகையோடு தொடர்புள்ள தீர்க்கதரிசனங்களை மூன்று பிரிவாகப் பிரிக்கலாம்**

1. நிறைவேறிவிட்ட தீர்க்கதரிசனங்கள்

2.நிறைவேறிக் கொண்டிருக்கும் தீர்க்கதரிசனங்கள்

3.நிறைவேற வேண்டிய தீர்க்கதரிசனங்கள்

கடைசி காலத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளைக் குறித்து வேதம் முழுவதிலும் ஏராளமான தீர்க்கதரிசனங்கள் முன்னுரைக்கப்பட்டுள்ளது. இயேசு கிறிஸ்துவின் வருகையையும், இந்த உலகத்தின் முடிவையும் முன்னறிவிப்பைகள் இவை.

**கடைசிகால நிகழ்ச்சிகளை முதலாவது பட்டியலிடுவோம்;**

**மத்தேயு 24-ல் கூறப்பட்டுள்ள நிகழ்ச்சிகள்**

- எருசலேம் தேவாலயம் இடிக்கப்படும். யுத்தங்கள் உண்டாகும் (மத்தேயு 24:12; லூக்கா 21:6).
- ஜனங்களுக்கு விரோதமாய் ஜனங்கள் எழும்புவார்கள், ராஜ்யத்திற்கு விரோதமாய் ராஜ்யம் எழும்பும் (மத்தேயு 24:7).
- பஞ்சங்கள், கொள்ளைநோய்கள், பூமியதிர்ச்சிகள் ஏற்படும் (மத்தேயு 24:7; லூக்கா 21:11).
- கள்ளக்கிறிஸ்துகள், கள்ளத் தீர்க்கதரிசிகள் எழும்புவார்கள் (மத்தேயு 24:5,24).
- சுவிசேஷம் உலகமெங்கும் பிரசங்கிக்கப்படும் (மத்தேயு 24:14).
- பாழாக்கும் அருவருப்பு பரிசுத்த ஸ்தலத்தில் நிற்கும் (மத்தேயு 24:15)
- உலகம் இதுவரை கண்டிராத மிகுந்த உபத்திரவம் (மத்தேயு 24:21).
- உபத்திரவத்திற்குப் பின் சூரியன் இருளடையும், சந்திரன் ஒளி கொடுக்காது, நட்சத்திரங்கள் வானத்திலிருந்து விழும் (மத்தேயு 24:29).
- அத்திமரம் துளிர்விடுவதுபோல இஸ்ரவேல் நாடு மறுபடியும் உருவாகும் (மத்தேயு 24:32,33).
- நோவா காலத்தில் நடந்ததுபோல நடக்கும் (மத்தேயு 24:37-39).

லூக்கா 21:7-32-ல் கூறப்பட்டுள்ள நிகழ்ச்சிகளில் மேலே குறிப்பிடப்படாத சில நிகழ்ச்சிகளை இங்கே பார்க்கிறோம்.

- கலகங்கள் உண்டாகும் (லூக்கா 21:9).
- வானத்தில் பல தோற்றங்கள், அடையாளங்கள் உண்டாகும் (லூக்கா 21:11).
- எருசலேம் சேனைகளால் சூழப்படும் (லூக்கா 21:20).
- சமுத்திரமும், அலைகளும் முழக்கமாயிருக்கும் (லூக்கா 21:25).

2தீமோத்தேயு 3:1-5ல் கூறப்பட்டுள்ளவை

- கடைசி காலத்தில் மனிதருடைய தரம் மிக தாழ்வுநிலை அடையும். மனிதர்கள் **தற்பிரியராக, பணப்பிரியராக, தூஷிக்கிறவர்களாக, பெற்றோருக்கு கீழ்ப்படியாத பிள்ளைகளாக, பரிசுத்தமில்லாதவர்களாக, சுபாவ அன்பில்லாதவர்களாக, இச்சையடக்கமில்லாதவர்களாக, சுகபோகப்பிரியராக இருப்பார்கள்.**

மேலும்...

- தானியேல் 12:4-ல் கடைசி நாட்களில் அறிவு பெருகிப்போம்.
- விசுவாசத் துரோகம் உண்டாகும் (2 தெசலோனிக்கேயர் 2:3).
- 10 நாடுகளின் கூட்டணியின் மூலம் உலகப்பொருளாதாரம் கட்டுப்படுத்தப்படும் (தானியேல் 2:33,34).
- திருச்சபை எடுத்துக்கொள்ளப்படும்-இயேசுவின் இரகசிய வருகையில் சபை மத்திய ஆகாயத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.
- 7 வருட உபத்திரவ காலம் (தானியேல் 9:27).
- அர்மகதோன் யுத்தம் (வெளிப்படுத்தல் 19:17-21).
- இயேசு கிறிஸ்துவின் 1000 வருட ஆட்சி (வெளிப்படுத்தல் 20:6).
- கோகு, மாகோகு யுத்தம் (வெளிப்படுத்தல் 20:8,9).
- வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு (வெளிப்படுத்தல் 20:11-15).
- புதிய வானம், புதிய பூமி (வெளிப்படுத்தல் 21, 22 அதிகாரங்கள்).

- தொடரும்





# இராஜாக்களின் முதலாம், இரண்டாம் புத்தகங்கள்

(1, 2 இராஜாக்கள்) **புத்தக அறிமுகம்**

**Rev. Dr. சாமுவேல் ராஜ் R.**

All India National Director, Global University

எபிரெய வேதாகமத்தில் இப்புத்தகங்கள் இரண்டும் ஒரே புத்தகமாக இருப்பதால் இவற்றை சேர்த்தே கற்று விளங்கிக்கொள்ளுதல் நலம்;.

2 சாமுவேல் புத்தகத்தில் நாம் வாசிக்கும் சரித்திரத்தின் தொடர்ச்சியே 1,2 இராஜாக்களின் புத்தகங்களில் நாம் காண்கிறோம். இராஜாக்களின் இரண்டு புத்தகங்களும் இஸ்ரவேலரின் மார்க்க, ஒழுக்க, அரசியல் சரிவுநிலைகள் பற்றி நமக்குத் தெரிவிக்கின்றன.

தீர்க்கதரிசியாகிய எரேமியா இப்புத்தகத்தை எழுதியிருக்க வேண்டும் என்று நம்பப்படுகிறது.

நியாயாதிபதிகளின் காலத்தில் தேசம் தேவனைவிட்டு ஊழல் நிறைந்து காணப்பட்டது. தாவீது ஒரு நல்ல இராஜா; அவன் தேவனுக்குப் பிரியமாக நீதியுடன் ஆட்சிசெய்தான். ஆனாலும் ஒன்றாயிருந்த இஸ்ரவேல் ராஜ்ஜியம், அவன் மகனான சாலமோன் காலத்துக்குப்பின் இரண்டாகப்பிரிந்தது. பின்பு அவர்கள் தங்கள் பகைஞரின் தேசங்களுக்கு நாடு கடத்தப்பட்டுச் சிறையாய்க் கொண்டு செல்லப்பட்டனர். இந்த விபரங்களையெல்லாம் 1,2 இராஜாக்களின் புத்தகங்களில் நாம் பார்க்கிறோம். இஸ்ரவேலரின் சரித்திரத்தில் சுமார் 400 ஆண்டுகால சரித்திரத்தை (கி.மு. 970-586) சுருக்கமாய் இப்புத்தகங்கள் நமக்குத் தருகின்றன.

**1,2 இராஜாக்களின் புத்தகங்களின் பொருளடக்கங்களை முதலில் காண்போம்:**

**1 இராஜாக்கள்**

1. சாலமோன் இஸ்ரவேலின்மேல் ராஜாவாகுதல், (1இரா. 1-5).
2. எருசலேமில் தேவன் தமது ஆலயத்தை ஸ்தாபித்தல் (1 இரா. 6-9).
3. சாலமோன் தேவனைவிட்டு விக்கிரகங்களைப் பின்பற்றுதலும், ராஜ்ஜியம் பிளவுபட்டதும் (1இரா 10:1-12:24).
4. வடக்கு ராஜ்யத்தை கர்த்தரை விட்டு தூரமாய்க் கொண்டு சென்ற யெரோபெயாம் (1இரா.12:25-14:20).
5. கட்டுப்பாடில்லாமல் தவித்த வடக்கு ராஜ்ஜிய அரசர்கள் (1இரா.14:21-16:34).
6. ஆகாப் ராஜாவை எலியாவைக் கொண்டு நியாயம் விசாரித்தக் கர்த்தர் (1இரா. 16:35-22:53)

**2 இராஜாக்கள்**

1. எலிசா, யெகூ, ஆசகேல் ஆகியோரைக்கொண்டு ஆகாபின் குடும்பத்தை நியாயம் விசாரித்த கர்த்தர் (2 இரா. 1-10)
2. வடக்கு தெற்கு இராஜ்யங்களை ஆண்ட பல்வேறு அரசர்கள் (2 இரா. 11-16).
3. இஸ்ரவேல் அசீரியரால் சிறைப்பிடிக்கப்படுதல் (2 இரா. 17).
4. எசேக்கியா காலத்தில் ஏசாயாவின் மார்க்க மறுமலர்ச்சிகள் (2 இரா .18-20).

5. மனாசேயின் அக்கிரமங்கள் (2 இரா.21).

6. யோசியாவின் கால மார்க்க மறுமலர்ச்சி (2 இரா. 22:1-23:30).

7. யூதா பாபிலோனால் சிறைப்பிடிக்கப்படுதல் (2இரா. 23:31-25:30).

1 இராஜாக்கள் புத்தகமும், அதைத் தொடர்ந்துள்ள 2 இராஜாக்கள் புத்தகச் சரித்திர சம்பவங்களும்:

1 இராஜாக்கள் புத்தகத்தில் உள்ள 22 அதிகாரங்களையும் இரண்டு பகுதிகளாகப் பகுத்துப் பார்க்கலாம்:

1. சாலமோன் ஆட்சி காலம், (அதி. 1-11)

2. பிளவுற்ற தேசம், (அதி. 12-22)

**சாலமோனின் ஆட்சிக்காலம்:**

கர்த்தர் சாலமோனுக்கு அளவற்ற ஞானத்தையும், கடற்கரை மணலத்தனையான மனோவிருத்தியையும் கொடுத்தார். அவன் தமது வழிகளில் நடக்கவும், தனது தகப்பன் கர்த்தரை பின்பற்றியதுபோல நீதியாய் நடக்கவேண்டும் என்றும் காத்தர் அவனுக்குச் சொன்னார். கர்த்தருக்கென மிகப்பிரம்மாண்டமான தேவாலயத்தையும் சாலமோன் கட்டினான்.

ஆனாலும் தனது அந்திய காலத்தில் அவன் கர்த்தருக்கு உண்மையாயிருக்க வில்லை. அவன் திருமணம் செய்துகொண்ட ஏராளமான மனைவிகள் அவன் இருதயத்தைக் கர்த்தரை விட்டு வழிவிலகச் செய்தனர் (1இரா. 11:3-6).

**பிளவுற்ற தேசம்:**

சாலமோனுடையக் காலத்துக்குப்பின் ராஜ்ஜியம் கி.மு.931-ல் இரண்டாகப் பிரிந்தது (1இரா.12:19,20). இது கர்த்தருடைய செயலாயிருந்தது. ஒன்றுபட்டிருந்த இஸ்ரவேல் தேசம் பிளவுற்ற ராஜ்ஜியமாயிற்று. வடக்கேயுள்ள பத்துக் கோத்திரங்களுக்கு யெரொபெயாம் அரசனானான். இவன், முன்பு சாலமோனுடைய தளபதியாயிருந்தவன். பத்துக் கோத்திரங்கள் இவனைப் பின்பற்றினர். இவர்களுக்கு இஸ்ரவேல் என்றும் வடக்கு இராஜ்ஜியம் என்று பெயர். சமாரியா இவர்களுடைய தலைநகரமாயிருந்தபடியால், இது சமாரியா என்றும் அழைக்கப்பட்டது. மீதமிருந்த இரண்டு கோத்திரங்களான யூதாவும், பென்யமீனும் தாவீதின் குடும்பத்தைப் பின்பற்றினர். இவர்களுக்கு சாலமோனின் குமாரனான ரெகோபெயாம் அரசனானான். இவர்களுக்கு யூதா என்றும், தெற்கு ராஜ்ஜியம் என்றும் பெயர் இதன் தலைநகரம் எருசலேம் ஆகும்.

யெரோபெயாம் முதல் ஓசெயா வரை 19 ராஜாக்கள் (கி.மு 931 முதல் 722 வரை) வடக்கு ராஜ்ஜியத்தை ஆண்டு வந்தனர். ஒன்பது வெவ்வேறு வம்சங்களிலிருந்து வந்த இவர்கள், கர்த்தரின் பாதையில் நடக்கவில்லை. மக்களை விக்கிரக ஆராதனைக்கு நேராய் வழிநடத்தினர். எனவே, தேவன் அவர்களை அசீரியரின் கையில் விற்றுப்போட்டார். கி.மு722-ல் அசீரியர் இஸ்ரவேல் தேசத்தை முறியடித்து, வடக்கு ராஜ்யத்தின் பத்துக் கோத்திரங்களையும் சிறைப்பிடித்துச் சென்றனர் (2இரா.17:6-23). (வேதபகுதியை வாசித்து விபரங்களை மனதிற்பதியுங்கள்).

ஓசியா, ஆமோஸ், யோனா, மீகா ஆகிய தீர்க்கதரிசனப் புத்தகங்கள் தரும் சரித்திர, இறையியல் வெளிப்பாடுகள் இக்கால ஆவிக்குரிய, ஒழுக்கநிலைச் சரிவுகளை நமக்குத் தெரிவித்திருக்கின்றன. அவை ராஜாக்களின் புத்தகங்கள் தரும் சரித்திரக் குறிப்புகளைவிட தெளிவானவையாகும்.

வடக்கு ராஜ்யம் சிறை சென்றபின்பு, யூதா என்ற தெற்கு ராஜ்யம் மட்டுமே கானான் தேசத்தில் எஞ்சியிருந்தது (2இரா.17-ம் அதிகாரம்). சாலமோனின் மகனாகிய ரெகொபெயாம் முதல், சிதேக்கியா வரை 20 ராஜாக்கள் கி.மு 931 முதல் 586 வரை யூதாவை ஆண்டார்கள். இவர்களனைவரும் ஒரே வம்சமான தாவீதின் வம்சத்திலிருந்து வந்தவர்கள். தெற்கு ராஜ்யமாகிய யூதாவும், கர்த்தர் விரும்பிய வழிகளிலும் மோசேயின் கட்டளைகளிலும் நடக்கவில்லை. இந்த இராஜாக்கள் ஜனங்களை விக்கிரக ஆராதனைக்கு நடத்தியதுமல்லாமல், சாலமோன் கட்டிய தேவாலயத்துக்குள்ளும் விக்கிரங்களைக் கொண்டுவந்து தேவாலயத்தையும் தீட்டுப்படுத்தினர். எனவே கர்த்தர் அவர்களை பாபிலோன் என்னும் பகைவர்களிடம் விற்றுப்போட்டார்.

கி.மு 586-ல் நேபுகாத்நேச்சார் என்ற பாபிலோனிய மன்னன் தெற்கு ராஜ்யமாகிய யூதாவைச் சிறைப்பிடித்து, தேவாலயத்தைக் கொள்ளையிட்டு, இடித்துத் தரைமட்டமாக்கி, பட்டணத்தையும் தீக்கொழுத்திப் போட்டான், (2இரா.25ம் அதிகாரம்); (வேத பகுதியை வாசியுங்கள்). இவையெல்லாம் கர்த்தர் ஏற்கனவே உபாகமப் புத்தகத்தில் சொன்ன எச்சரிக்கை சத்தமே! அவர்களோ அதற்குக் கீழ்படியவில்லை. மேலும், யோவேல், ஏசாயா, மீகா (இவன் வடக்கு ராஜ்யத்துக்கும் தீர்க்கதரிசனமுரைத்தான்), நாகூம், ஆபகூக், செப்பனியா, எரேமியா ஆகிய தீர்க்கதரிசிகளும் தெற்கு ராஜ்ஜியத்தில் தீர்க்கதரிசனமுரைத்து ஊழியம் செய்தும் பலனளிக்கவில்லையே!

இந்தத் தீர்க்கதரிசிகளின் ஊழியத்துக்கு முன்பே எலியா, எலிசா ஆகிய தீர்க்கர் இரு தேசங்களுக்கும் தீர்க்கதரிசனம் உரைத்து, யேகோவா தேவனுடைய மார்க்கத்தை நிலைநாட்ட ஊழியம் செய்தவர்களாவர்.

கி.மு 931 முதல் 722 வரை அரசாண்ட வடக்கு ராஜ்ய இராஜாக்களின் பெயர்களையும், கி.மு 931 முதல் 586 வரை தெற்கு ராஜ்ஜியத்தில் ஆண்ட ராஜாக்களின் பெயர்களையும்; தனித்தனியே இங்கு குறிப்பிடுவது பயனளிக்கும்.

1,2 இராஜாக்களின் புத்தகங்களில் அவை தனித்தனியே கிரமமாய் கொடுக்கப்படாமல் இஸ்ரவேல், யூதா ராஜாக்கள் எனக் காலக்கிரமமாய்த் தரப்பட்டுள்ளதால் அவற்றை விளங்கிப்படிப்பது சற்று சிரமம்.

இஸ்ரவேலின் முதல் அரசன் சவுல்; இரண்டாம் அரசன் தாவீது; மூன்றாம் அரசன் சாலமோன். சாலமோனுக்குப் பிறகு ராஜ்ஜியம் பிளவுற்றது. இதோ, எளிதாகத் தரப்பட்டுள்ள பிளவுபட்ட ராஜ்ஜிய அரசர் பட்டியல்:
வடக்கு ராஜ்யம் (கிமு 931-722):

1.**யெரொபெயாம்**I, 22 வருடம் (Iஇரா.12:25-14:20); 2.**நாதாப்**, 2 வருடம் (Iஇரா.15:25-31); 3.**பாஷா,** 24 வருடம் (Iஇரா.15:32-16:17); 4.**ஏலா,** 2 வருடம் (Iஇரா.16:8-14); 5.**சிம்ரி,** 7நாட்கள் (Iஇரா.16:15-20); 6.**உம்ரி,** 12 வருடம் (Iஇரா. 16:23-28); 7.**ஆகாப்** 22 வருடம் (Iஇரா.16:29-22:40); 8.**அகசியா** 2 வருடம் (Iஇரா.22:51-IIஇரா.10:18) வடக்கு ராஜ்ஜிய அரசனான அகசியாவின் சரித்திரக் குறிப்புடன் 1இராஜாக்கள் முடிவடைகிறது (கி.மு853); 9.**யோராம்** 12 வருடம் (Iஇரா. 1:17;3:1-8;15); 10.**யெகூ** 28 வருடம் (IIஇரா.9:30-10:36); 11.**யோவாகாஸ்** 17 வருடம் (IIஇரா.13:1-9); 12.**யோவாஸ்**16 வருடம் (IIஇரா.13:10-25); 13.**யெரோபெயாம்** II 41 வருடம் (IIஇரா.14:23-29;) 14.**சகரியா** 6 மாதம் (IIஇரா.15:8-12); 15.**சல்லூம்** 1 மாதம் (IIஇரா.15:13-15); 16.**மெனாகேம்** 10 வருடம்

(IIஇரா.15:16-22); 17.**பெக்கா** 20 வருடம் (IIஇரா.15:27-31); 18.**பெக்காகியா** 2 வருடம் (IIஇரா.15:27-31); 19.ஓசெயா 9 வருடம் (IIஇரா.15:30; 17:1-41).

சமாரியாவின் வீழ்ச்சி; வடக்கு ராஜ்ஜியம் அசீரியாவுக்குச் சிறைச்சென்றது(கிமு722).

தெற்கு ராஜ்ஜியம் (கி.மு 931-586):

1.**ரெகொபெயாம்** 17 வருடம் (Iஇரா.12:1-24;14:21-31); 2.**அபியாம்** 8 வருடம் (Iஇரா 15:1-8); 3.**ஆசா** 41 வருடம் (Iஇரா 15:9-24); 4.**யோசபாத்**, 25 வருடம் (Iஇரா 22:41-50) தெற்கு ராஜ்ஜிய அரசனான யோசபாத்தின் சரித்திரக் குறிப்புடன் Iஇராஜாக்களின் புத்தகம் முடிவடைகிறது (கி.மு 874); 5.**யோராம்** 8 வருடம் (IIஇரா.8:16-24); 6.**அகசியா** 1 வருடம் (IIஇரா. 8:25-29;9:27-29); 7.**அத்தாலியாள்** 6 வருடம் (IIஇரா.11:1-21); 8.**யோவாஸ்** 40 வருடம் (IIஇரா.12:1-21);9.**அமத்சியா,** 29 வருடம் (IIஇரா.14:1-22); 10.**உசியா,** 52 வருடம் (IIஇரா.15:1-7); 11.**யோதாம்,** 16 வருடம் (IIஇரா.15:30,32-38); 12.**ஆகாஸ்,** 16 வருடம் (IIஇரா.16:1-20); 13.**எசேக்கியா,** 29 வருடம் (IIஇரா.18:1-20:21); 14.**மனாசே** 55 வருடம் (IIஇரா.21:1-18); 15.**ஆமோன்**, 2 வருடம் (IIஇரா.21:19-26); 16.**யோசியா** 31 வருடம் (IIஇரா.22:1-23:30); 17.**யோவாகாஸ்** 3மாதம் (IIஇரா.23:31-33); 18.**யோயாக்கீம்**, 11 வருடம் (IIஇரா.23:34-24:7); 19. **யோயாக்கீன்** 3 மாதம் (IIஇரா.24:6-16); 20.**சிதேக்கியா** 11வருடம், (IIஇரா.24:18-25:26). எருசலேமின் வீழ்ச்சி (கி.மு 586); தெற்கு ராஜ்யம் பாபிலோனுக்குச் சிறை சென்றது.

இராஜாக்களின் புத்தகத்தின் கருப்பொருள்:

Iஇரா.9:4-7-ல் ஆண்டவர் சொல்லியிருந்த வசனங்களை கவனியுங்கள்

"நான் உனக்குக் கட்டளையிட்ட எல்லாவற்றையும் நீ செய்து, என் கட்டளைகளையும் என் நியாயங்களையும் கைக்கொள்ளும்படிக்கு, என் சமுகத்தில் மன உத்தமமும் செம்மையுமாய் உன் தகப்பனாகிய தாவீது நடந்ததுபோல நடப்பாயானால், இஸ்ரவேலின் சிங்காசனத்தின்மேல் உட்காரும் புருஷன் உனக்கு இல்லாமற்போவதில்லை என்று உன் தகப்பனாகிய தாவீதோடே நான் சொன்னபடியே, இஸ்ரவேலின்மேலுள்ள உன் ராஜ்யபாரத்தின் சிங்காசனத்தை என்றைக்கும் நிலைக்கப்பண்ணுவேன்.

நீங்களும் உங்கள் பிள்ளைகளும் என்னைவிட்டுப் பின்வாங்கி, நான் உங்களுக்கு முன்வைத்த என் கற்பனைகளையும், என் கட்டளைகளையும் கைக்கொள்ளாமற்போய், வேறே தேவர்களைச் சேவித்து, அவைகளைப் பணிந்துகொள்வீர்களாகில், நான் இஸ்ரவேலுக்குக் கொடுத்த தேசத்திலே அவர்களை வைக்காதபடிக்கு நிர்மூலமாக்கி, என் நாமம் விளங்க நான் பரிசுத்தமாக்கின இந்த ஆலயத்தை என் சமுகத்தை விட்டுத் தள்ளுவேன்; அப்பொழுது இஸ்ரவேல் சகல ஜனங்களுக்குள்ளும் பழமொழியாகவும் வசைச் சொல்லாகவும் இருப்பார்கள்".

மேற்கண்ட நான்கு வசனங்களின் தீர்க்கதரிசன நிறைவேறுதலையே நாம் 1,2 இராஜாக்களின் புத்தகங்களில் காண்கிறோம்.

சாலமோனுக்குப் பிறகு, வடக்கு ராஜ்ஜியத்தை ஆண்ட 19 இராஜாக்களும், தெற்கு இராஜ்ஜியத்தை ஆண்ட 20 இராஜாக்களும் தேவன் சாலமோன் மூலமாய்த் தந்த இந்த வாக்குகளுக்குச் செவிசாய்க்கவில்லையே!

ஒவ்வொரு இராஜாக்களாக 39 இராஜாக்களின் வாழ்க்கைக் குறிப்புகளையும் நேரமெடுத்து வாசித்தால் (தனித்தனியாகப் பெயர் எழுதி வைத்து வாசித்தால் போதும்), அவை நம்மை அதிரவைத்துவிடும்.

### இராஜாக்களின் புத்தகங்கள் தரும் விழிப்புணர்வு:

பெரும்பாலும் இப்புத்தகங்கள் இரண்டும் யூதா மக்களின் சிறையிருப்பின் ஆரம்ப காலத்தில் எழுதப்பட்டவையாகும். அதாவது 2 இராஜாக்கள் புத்தகத்தின் கடைசி சம்பவங்களுக்குப் பின்பு, யூதா பாபிலோனில் சிறைப்பட்டிருந்த காலம் அது. தேவாலயம் அழிக்கப்பட்டுவிட்டது. எருசலேமின் மதில்களெல்லாம் சிதைந்துபோய் விட்டிருந்தன.

யூதா கோத்திரமும், பென்யமீன் கோத்திரமும், லேவி கோத்திரத்தில் சிலரும் தங்கள் சுயதேசத்திலிருந்து வெகுதூரத்திலிருந்த புறஜாதிய மன்னர்களுக்கு சேவைபுரிந்து கொண்டிருந்தனர்.

என்ன நடந்தது? ஏன் எங்களுக்கு இப்படி? எனப் பலவாறும் குழம்பி கேள்விக்கேட்டுக்கொண்டிருந்த அந்த மக்களுக்குப் பதில் தந்து, விளக்கம்தர இப்புத்தகங்கள் எழுதப்பட்டன எனலாம். சுருக்கமாய் அவர்களுடைய கேள்விகளுக்குப் பதில் தந்தால், நீங்கள் யாரை சேவித்தீர்கள் (ஆராதித்தீர்கள்?) என்று பதில் தரலாம்.

நல்ல ராஜாக்களாயிருந்த சிலர் எருசலேமில் கர்த்தரை ஆராதித்தார்கள். நியாயப்பிரமாணப் புத்தகத்தை ஆராய்ந்துப் பார்த்தனர். தாங்கள் கர்த்தருக்காய் வாழ்ந்தது மட்டுமல்ல, தம் மக்களையும் அவர் வழிநடக்கத் தூண்டினார்கள். ஆனால் கெட்டவர்களாய் வாழ்ந்த அரசர்களோ, மேடைகளில் விக்கிரகங்களுக்குப் பலியிட்டு புறஜாதியாரின் மார்க்க வழிகளில் நடந்தனர்.

தாவீது கர்த்தரை கனம்பண்ணினான்; அவரது பிரமாணங்களைக் கைக்கொண்டனர். யெரோபெயாமோ தேவனைச் சார்ந்திருக்கவில்லை; தேவாலயத்தை கனவீனம் செய்தான். மாறாக, அரசியல் உள்நோக்கத்துடன் தேசத்தில் வடக்கே ஒன்றும், தெற்கே ஒன்றுமாக இரண்டுக் கன்றுக்குட்டிகளை ஸ்தாபித்தான். அதன்மூலம் மக்கள் எருசலேம் வரை சென்று தெற்கு ராஜ்ய ராஜாவுக்குத் தங்கள் விசுவாசத்தைக் காட்டாமல் தடுத்தான். இவன் நிறுத்தி, மக்களை வணங்கச் செய்த கன்றுக்குட்டிகள்மூலம் தேசத்தில் விக்கிரக ஆராதனைப் பெருகிற்று ஒழுக்கநிலையும் சரிந்தது.

நல்ல ராஜாக்களாயிருந்த சில தெற்கு ராஜ்ஜிய ராஜாக்கள் தாவீதின் மாதிரியைப் பின்பற்றினர். பிறர் புறஜாதிய தெய்வங்களை வணங்கினர். கெட்டவர்களாயிருந்த அனைத்து வடக்கு இராஜ்ஜிய ராஜாக்களும் யெரோபெயாமின் மாதிரியைப் பின்பற்றினர்.

இவையெல்லாம் இருப்பினும் கர்த்தர் தமது மக்களுக்கு எப்போதும் நல்லவராகவே இருந்தார் என இராஜாக்களின் புத்தகங்கள் நமக்குப் போதிக்கின்றன.

சாலமோன் காலத்தில் உச்சிதங்களைக் கண்ட மக்கள், சிறையிருப்பின் காலத்தில் இழிநிலையை அடைந்தனர். உபாகமம் 28-ம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட ஆசீர்வாதங்களைக் கர்த்தருக்குக் கீழ்படிந்தபோது அனுபவித்தனர். அதன் பிற்பகுதியில் சொல்லப்பட்ட (உபாகமம் 28:15-68) சாப வார்த்தைகளின் உண்மை களை கர்த்தருக்குக் கீழ்படியாதபோது நிச்சயமாய் அனுபவித்தனர்.

கவனமாய் சிந்தித்து கர்த்தரைப் பிரியப்படுத்தி நாம் வாழ கர்த்தர் நமக்குக் கிருபை தருவாராக. இவை வெறும் சரித்திரமல்ல, சிந்தித்துச் செயல்படத் தூண்டும் ஆழமான சத்தியங்களை இப்புத்தகங்கள் தம்மகத்தே கொண்டுள்ளன.



# கர்த்தராலே சொல்லப்பட்டவைகள் நிறைவேறும்

Mrs. நிர்மலா ஜெயராஜ்

நிர்வாகக்குழு உறுப்பினர், தமிழ் பிரதேச பெண்கள் ஊழியம்

கர்த்தரும் மீட்பருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அனைத்து பரிபூரண ஜீவன் வாசகர்களுக்கும் அன்பின் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

"விசுவாசித்தவளே பாக்கியவதி கர்த்தராலே அவளுக்குச் சொல்லப்பட்டவைகள் நிறைவேறும்" (லூக்கா 1:45).

நம்முடைய ஆண்டவர் சொல் தவறாதவர், வார்த்தையாகிய கிறிஸ்து நேற்றும், இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார். வேதாகமத்தில் தம்முடைய பிள்ளைகளுக்கு எப்படி வார்த்தையால் தம்மை வெளிப்படுத்தினாரோ, அதே வண்ணம் இன்றும் தம்முடைய பிள்ளைகளுக்குத் தம்மை வெளிப்படுத்துகிறார். சொல்லப்பட்ட வார்த்தைகளை நிறைவேற்றுகிறார்.

**1.நம்மைக் குறித்து சொல்லப்பட்ட தீர்மானிக்கப்பட்ட கர்த்தருடைய வார்த்தைகள்**

உலகத்தை உண்டாக்கினபோது மனிதனைக் குறித்த பிரதான திட்டத்தையும், நோக்கத்தையும் அவர் பிரமாணித்து விட்டார். நம்மைக் குறித்து அவர் சொல்லிய வார்த்தைகளை ஒருவரும் மாற்ற முடியாது. சூழ்நிலைக்கேற்ப மாற்றியமைக்கவும் முடியாது.

ஆதாமுக்கென்று சொல்லப்பட்ட ஆளுகையும், ஆசீர்வாதங்களும் ஏவாளுக்கும் உரியதாக வேண்டும். காரணம், தேவன் தம்முடைய சாயலாக ஆணையும் பெண்ணையும் சிருஷ்டிக்கும்போது அவர்களை நோக்கி. "நீங்கள் பலுகிப் பெருகி பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும் பூமியின் மேல் நடமாடுகிற சகல ஜீவ ஜந்துக்களையும் ஆண்டு கொள்ளுங்கள் என்று சொல்லி அவர்களை ஆசீர்வதித்தார்" (ஆதி.1:28). பாவத்தில் விழுந்த பின்பும், அவர் சொல்லிய வார்த்தைகளில் மாற்றம் ஏற்படாமல் மீட்பின் திட்டத்தை வெளிப்படுத்துகிறதை நாம் பார்க்க முடியும். "உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன். அவர் உன் தலையை நசுக்குவார்" என்று ஏவாளுக்கு உரைக்கப்பட்ட வாக்கு இயேசுவின் மூலமாக அப்படியே நிறைவேறிற்று.

சாராள் "ஜாதிகளுக்குத் தாயாகவும், அவளாலே, ஜாதிகளின் ராஜாக்கள் உண்டாகவும் அவளை ஆசீர்வதிப்பேன்" என்று அவளைக் குறித்து சொல்லப்பட்டவைகள் தீர்க்கமாக நிறைவேறினது. தேவன் நம்மைக் குறித்து சொன்ன வாக்குறுதிகள் நிச்சயமாக நிறைவேறும்.

## 2. இக்காலத்தில் நிறைவேறிக் கொண்டிருக்கிற சொல்லப்பட்ட வார்த்தைகள்

நம்மைக்குறித்து சொல்லப்பட்ட வார்த்தைகளை இந்நாட்களிலும் தேவன் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்.

யோவேல் 2:28,29 "நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது உங்கள் குமாரரும், குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள்...ஊழியக்காரிகள் மேலும் அந்நாட்களிலே என் ஆவியை ஊற்றுவேன்". பட்சபாதமில்லாத நிலையில் பரிசுத்த ஆவியானவர் தம்முடைய அபிஷேகத்தின் நிறைவை சகோதரிகள் மேலும் ஊற்றி, தம்முடைய வார்த்தைகளை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்.

நம்மைக் குறித்து சொல்லப்பட்ட கட்டளைகளை நாம் இந்நாட்களில் கடைபிடிக்க அவர் எதிர்பார்க்கிறார்.

"எழும்பு உன் வல்லமையைத் தரித்துக்கொள்". "தூசியை உதறி விட்டு எழும்பு". "எழும்பி பிரகாசி", கெம்பீரித்துப் பாடு". "மகிழ்ந்து களிகூறு" என்று எக்காலத்திலும் பொருந்தக்கூடிய கட்டளைகளை நாம் நிறைவேற்ற அவர் விரும்புகிறார்.

நம்மைக் குறித்து சொல்லப்பட்டு வரும் அவருடைய வார்த்தைகள் நம்மை மேன்மைப்படுத்தும் "இவள் தன்னால் இயன்றதைச் செய்தாள்", "என்னிடத்தில் நற்கிரியைகளைச் செய்திருக்கிறாள்" என்று சொல்லி தம்முடைய ஜனத்தை மேன்மைப்படுத்துகிறார்.

## 3. சொல்லப்பட போகிற வார்த்தைகள்

தன்னலம் பார்க்காமல், கொடுக்கப்பட்ட கடமைகளை அன்புடனும், உத்தரவாதத்துடனும் செய்கிற உத்தம ஸ்திரீகளுக்கு கர்த்தர் சொல்லும் வார்த்தைகள் நிறைவேறும். "அவள் கைகளின் பலனை அவளுக்கு கொடுங்கள். அவளுடைய செய்கைகள் வாசல்களில் அவளைப் புகழக்கடவது".

ஆண்டவரை உத்தம இருதயத்தோடு பின்பற்றி, ஆராதித்து கர்த்தரை மகிமைப்படுத்தும் பெண்களை கர்த்தர் கனப்படுத்துகிறார்.

"இவள் தன்னால் இயன்றதைச் செய்தாள், இந்த சுவிசேஷம் உலகத்தில் எங்கெங்கே பிரசங்கிக்கப்படுமோ ஆங்காங்கே அவளை நினைப்பதற்காக இவள் செய்ததும் சொல்லப்படும்".

அனைத்து காலங்களுக்கும் பொதுவான நம்மைக் குறித்துச் சொல்லப்பட்ட அனைத்து வார்த்தைகளையும் கர்த்தர் நிறைவேற்றுவதில் உண்மையுள்ளவராயிருக்கிறார். நமக்காக சொல்லப்பட்ட வார்த்தைகள் உளிவெட்டாக, தாற்றுக்கோல்கள் போல, சங்கத் தலைவர்களால் அறையப்பட்ட ஆணிகள் போல, ஒரே மேய்ப்பனால் அளிக்கப்பட்டிருக்கிறது. இவைகள் காலகாலங்களில் நிறைவேறுவதற்கு அவர் எதிர்பார்க்கிற அடிப்படை காரியம் "விசுவாசம்". "விசுவாசித்தவளே பாக்கியவதி கர்த்தராலே அவளுக்குச் சொல்லப்பட்டவைகள் நிறைவேறும்" தாமதமானாலும் நிறைவேறும்.

கர்த்தரால் நமக்கென்று சொல்லப்பட்ட வார்த்தைகள் நம்முடைய விசுவாசத்தின் மூலம் நிறைவேறுகிறதைப் பார்க்க கர்த்தர் உதவி செய்வாராக.



# வசனத்தின்படி உங்கள் மனைவியை நேசிப்பது எப்படி?


## Rev. N. ஜான்சன்

தலைமைப் போதகர், நிறைவாழ்வு ஏ. ஜி. சபை, திருவேற்காடு
பொருளாளர், ஏ. ஜி. ஆண்கள் ஐக்கியம்


புதிதாக திருமணமான தம்பதியினர் தங்கள் வாழ்க்கையை மகிழ்ச்சியுடன் துவங்கினர். முதல் நாளன்று மனைவி ஆசை ஆசையாய் டீ தயாரித்து கணவனுக்குக் கொடுத்தாள். பேப்பர் படித்துக்கொண்டிருந்த கணவன் கைபிசகியதால் பீங்கான் கோப்பை கீழே விழுந்து சுக்குநூறாகச் சிதறியது.

முதல் நாளே புத்தம்புதிய கோப்பை உடைந்துவிட்டதால் கணவன் கோபப்பட்டு திட்டிவிடுவாரோ என்று மனைவி பயந்து அழத் துவங்கிவிட்டாள். உடனே கணவன் அவளைத் தேற்றி, நீ டீ கொடுக்கும்போது, கவனக்குறைவாக வாங்கி கீழே தவறவிட்டது நான்தான். தப்பு என் பெயரில்தான், என்னை மன்னித்துக்கொள் என்று கூறி அன்போடு அவளை அரவணைத்து ஆறுதல்படுத்தினான்.

புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து ...தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார் (எபே.5:25,27) என்று வேதம் கூறுகிறது. பல கணவன்மார்கள் உள்ளத்தில் அன்பு இருந்தாலும் அதை எப்படி வெளிப்படுத்துவது என்று அறியாததால் குடும்பங்களில் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ள முடியாத நிலை ஏற்படுகிறது.

ஆனால், ஒரு புருஷன் தன் மனைவியை எப்படி நேசிக்க வேண்டும் என்று பரிசுத்த வேதம் அருமையான ஆலோசனைகளை வழங்குகிறது. பின்வரும் ஏழு ஆலோசனைகளைக் கைக்கொள்ளுவதன்மூலம் ஒவ்வொரு புருஷரும் தங்கள் மனைவியின் மேல் உள்ள அன்பை வெளிப்படுத்த முடியும்.

### 1. உங்கள் மனைவிக்கு முன்னுரிமை கொடுங்கள்

ஒரு புருஷன் தன் மனைவியின்மேல் உள்ள அன்பை வெளிப்படுத்த வேதம் கூறும் முதலாவது ஆலோசனை, மனைவிக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்பதாகும். ஒரு கணவர் எப்பொழுதும் தேவனையும், அவர் இராஜ்யத்தையும் தன் வாழ்வின் பிரதான இடத்தில் வைக்க வேண்டும் (மத்.6:33). கர்த்தருக்கு அடுத்து தன் மனைவிக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். எனவே தான் வேதம், இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான். அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள் (ஆதி.2:24) என்று கூறுகின்றது.

குடும்பத்தில் மனைவி முக்கியமா? அல்லது தாய் தகப்பன், சகோதர சகோதரிகள், நண்பர்கள் முக்கியமா என்ற கேள்வி வரும்போது, ஒரு கணவர் கர்த்தருக்கு அடுத்து தன் மனைவியே முக்கியம் என்கிற நிலைப்பாட்டை உறுதியாக எடுக்க வேண்டும். இப்படி மற்ற எந்த உறவுகளையும்விட மனைவிக்கு முன்னுரிமை கொடுப்பதன் மூலமாகவே அவள்மேல் உள்ள உங்கள் அன்பை நீங்கள் வெளிப்படுத்த முடியும்.

### 2. மனைவியை குறைவில்லாமல் போஷியுங்கள்

ஒரு கணவர் தன் மனைவியின்மேல் வைத்துள்ள அன்பை வெளிப்படுத்த இரண்டாவது வழி, குறைவில்லாமல் அவளைப் போஷிக்க வேண்டும். எபேசியர் 5:29-ல் தன் சொந்த மாம்சத்தைப் பகைத்தவன் ஒருவனுமில்லையே; கர்த்தர் சபையைப் போஷித்துக் காப்பாற்றுகிறதுபோல ஒவ்வொருவனும் தன் மாம்சத்தைப் போஷித்துக் காப்பாற்றுகிறான் என்று பவுல் கூறுவதை நாம் வாசிக்க முடியும்.

மனைவி சாப்பிட்டாளா? இல்லையா? என்றுகூட விசாரியாமல் தான்மட்டும் ஹோட்டலில் விரும்பியதை சாப்பிட்டு விட்டு வீட்டுக்கு வரும் சுயநலக் கணவன்மார் அநேகர் பெருகிவிட்ட இந்த நாட்களிலே, இரட்சிக்கப்பட்ட ஒரு சில கணவர்கள் தன் மனைவிக்கு குறையில்லாமல் உணவையும், உடையையும் தந்து போஷிப்பது கர்த்தர் தனக்கு வைத்துள்ள முக்கியக் கடமை என்பதை மறந்துவிடக்கூடாது. ஒருவன் தன் சொந்த ஜனங்களையும் விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற் போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான் (1தீமோ.5:8).

### 3. மனைவிக்கு நல்ல பாதுகாவலராக இருங்கள்

குடும்பங்களில் பிரச்சனைகள் வரும்போது, தன் தாயோ, தகப்பனோ, அக்காவோ, தங்கையோ தன் மனைவியை வார்த்தையாலோ அல்லது செய்கையாலோ தாக்குவதற்கு ஒரு புருஷன் ஒருபோதும் இடம் கொடுத்துவிடக்கூடாது. அவர்களுக்கு முன் மனைவியை விட்டுக்கொடுத்து பேசக்கூடாது. எதுவாக இருந்தாலும் என்னிடம் பேசுங்கள். என் மனைவியின் மேல் தவறு இருந்தால் நான் அவளிடம் பேசுகிறேன். என்னை நம்பி வந்த என் மனைவியை நீங்கள் திட்டவோ, அல்லது தாக்கவோ நான் அனுமதிக்க மாட்டேன் என்று தெளிவாக உங்கள் நிலைப்பாட்டைக் கூறுங்கள்.

கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறதுபோல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார் (எபே.5:23). சபைக்கு இரட்சகராக (பாதுகாவலராக) இயேசு கிறிஸ்து இருப்பதுபோல, புருஷன் எப்பொழுதும் தன் மனைவிக்கு நல்லதொரு பாதுகாவலாக இருக்க வேண்டும். எல்லா சூழ்நிலையிலும் நான் எப்பொழுதும் உனக்கு பக்கபலமாக இருப்பேன் என்று மனைவிக்கு தைரியம் தருவதன்மூலம் அவள்மேல் உள்ள அன்பை கணவன் வெளிப்படுத்த வேண்டும்.

### 4. உங்கள் மனைவியைப் பாராட்டுங்கள்

நம் இந்தியக் கலாச்சாரத்தில் மற்றவர்களை நாம் எளிதில் பாராட்டிப் பழகவில்லை. ஆனால் கர்த்தருடைய பிள்ளைகள் மற்றவர்களைப் பாராட்டிப் பழகவேண்டும். விசேஷமாக ஒரு கணவன் தன் மனைவி நல்ல உடைகளை உடுத்தியிருக்கும்போதோ, அல்லது சுவையான உணவை சமைக்கும்போதோ, அல்லது கணவருடைய தேவையை அறிந்து உதவி செய்யும்போதோ, அவளைப் பாராட்டக் கற்றுக்கொள்ள வேண்டும்.

அவள் பிள்ளைகள் எழும்பி, அவளைப் பாக்கியவதி என்கிறார்கள்; அவள் புருஷனும் அவளைப்பார்த்து: அநேகம் பெண்கள் குணசாலிகளாயிருந்தது உண்டு; நீயோ அவர்கள் எல்லாருக்கும் மேற்பட்டவள் என்று அவளைப் புகழுகிறான் (நீதி.31:28,29) என்று வேதத்தில் நாம் காண்கிறோம். உங்கள் மனைவியிடம் நல்ல காரியங்களைப் பார்க்கும்போதெல்லாம் அவளை மனதார, உண்மையாகப் புகழுவதன் மூலமாக அவள்மேல் உள்ள உங்கள் அன்பை நீங்கள் வெளிப்படுத்த முடியும்.

## 5. மனைவியை கண்ணியத்தோடு நடத்துங்கள்

சில கணவன்மார் பொது இடங்களில் தங்கள் மனைவிகளை மரியாதைக் குறைவாக நடத்துகிறதையும், திட்டுகிறதையும், அடிக்கிறதையும் நாம் காணமுடியும். ஆனால் ஒரு கிறிஸ்தவன் பொது இடத்திலோ, அல்லது வீட்டுக்குள்ளோ தன் மனைவியை ஒருபோதும் கனவீனமாக பேசவோ, நடத்தவோக்கூடாது.

அந்தப்படியே புருஷர்களே, மனைவியானவள் பெலவீன பாண்டமாயிருக்கிற படியினால், உங்கள் ஜெபங்களுக்குத் தடை வராதபடிக்கு, நீங்கள் விவேகத்தோடு அவர்களுடனே வாழ்ந்து, உங்களுடனேகூட அவர்களும் நித்திய ஜீவனாகிய கிருபையைச் சுதந்தரித்துக்கொள்ளுகிறவர்களானபடியினால், அவர்களுக்குச் செய்யவேண்டிய கனத்தைச் செய்யுங்கள் (1பேதுரு3:7) என்று பவுல் அறிவுறுத்துகிறது போல, ஒரு புருஷன் தன் மனைவியை கண்ணியத்தோடு நடத்துவதன்மூலம் அவள்மேல் அன்புகூறுகின்றான், அதைக் காண்கின்ற மற்றவர்களுக்கு உங்கள்மேல் மரியாதைகூடும் என்பதில் சந்தேகமில்லை.

## 6. மனைவியிடம் மென்மையாக நடந்துகொள்ளுங்கள்

பெண்களுக்கு என்று சில பெலவீனங்கள் உண்டு. ஒரு புருஷன் அதைப் புரிந்துகொள்ளாமல், நீ எப்பொழுது பார்த்தாலும் உடம்பு சரியில்லை என்று சாக்குப்போக்கு சொல்லி வேலையைத் தட்டிக் கழிக்கிறாய். போயும் போயும் உன்னைப்போய் கல்யாணம் செய்தேனே என்று ஒருபோதும் உங்கள் மனைவியை கசந்துகொள்ளாதீர்கள்.

புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள், அவர்கள்மேல் கசந்துகொள்ளாதிருங்கள் (கொலோ.3:19) என்று கர்த்தர் வேதத்தில் கட்டளையிடுகிறதை நாம் காண்கிறோம். எனவே, மனைவியின் பெலவீனங்களைப் புரிந்துகொண்டு அவளுக்கு உங்களால் முடிந்த உதவிகளைச் செய்வதன் மூலமாக அவள்மேல் உள்ள உங்கள் அன்பை வெளிப்படுத்துங்கள்.

## 7. தாம்பத்திய கடமைகளை நிறைவேற்றுங்கள்

ஒரு புருஷன் தன் மனைவிக்கு செய்யவேண்டிய முக்கியக் கடமைகளில் ஒன்று தாம்பத்தியக் கடமை. கடுமையான வேலைகள், மனஉலைச்சல்கள், சரீர பெலவீனங்கள் நிமித்தம் ஒரு கணவன் தாம்பத்தியத்தைத் தட்டிக் கழிக்கும்போது, அது குடும்பத்தில் சண்டையாகவும், வெறுப்பாகவும் வெளிப்படத் துவங்குகிறது. சில நேரங்களில் திருமணத்திற்கு பின்பும் வெளியே தவறான பாலுறவுக்கும் வழிவகுத்து விடுகிறது.

புருஷன் தன் மனைவிக்குச் செய்யவேண்டிய கடமையைச் செய்யக்கடவன்; அப்படியே மனைவியும் தன் புருஷனுக்குச் செய்யக்கடவள் (1கொரி.7:3) என் வேதம் கட்டளையிடுகிறது. எனவே, புருஷன் தன் மனைவியின் உணர்வுப்பூர்வமான தேவைகளை அறிந்து, சிரத்தையோடு அவைகளைப் பூர்த்தி செய்வதன் மூலமாக தன் மனைவியின் மேல் உள்ள தன் அன்பை வெளிப்படுத்த வேண்டும்.

ஆக, எப்படியும், உங்களிலும் அவனவன் தன்னிடத்தில் அன்புகூருவது போல, தன் மனைவியினிடத்திலும் அன்புகூரக்கடவன்; மனைவியும் புருஷனிடத்தில் பயபக்தியாயிருக்கக்கடவள் (எபே.5:33) என்ற வசனத்தின்படி, ஒவ்வொரு புருஷரும் தன் கடமையைத் தவறாமல் நிறைவேற்றி, வார்த்தையினால் மட்டுமல்ல தன் செயல்களாலும் தன் மனைவிமேல் உள்ள தன் அன்பை வெளிப்படுத்தும்போது, குடும்பத்தில் தேவனுடைய சமாதானமும், ஆசீர்வாதமும் பெருகும். நிச்சயம் உங்கள் குடும்பம் ஒரு குட்டிப் பரலோகமாக மாறும்.



# புதிய மாற்றங்களைப் பயன்படுத்துவோம்

Rev. J. தேவதாசன் கலையரசன்

Senior Pastor, Bethel AG Church, Kolathur

மெகா சர்ச் என்பது வேதாகமத்தின்படி சரியா தவறா என்பது இந்நாளில் அதிகளவில் விவாதிக்கப்படுகிறது. உங்களின் அபிப்பிராயம் என்ன? வாரம்தோறும் ஞாயிறு ஆராதனையில் 2000 மக்கள் கூடும் சபைகளை மெகா சர்ச் (பெரிய சபை-Mega Church) என்று கூறுகிறார்கள். 1970களில் தான் மெகா சர்ச் என்ற கருத்தியல் பேசும் பொருளாகியது. ஆனால் அது இன்று அசுரவேகத்தில் எல்லா தேசங்களிலும் பலுகிப் பெருகுகிறது.

## பெரிய சபை தவறு என்போரின் வாதங்கள்

- பெரிய சபைகளில் நேரடி கண்காணிப்பு இராது. எனவே, **சீஷத்துவம்** நடைபெறாது.
- கட்டுப்பாடற்ற சுதந்திரத்துடன் கூட்டத்தோடு கூட்டமாக மக்கள் வந்து போகும் நிலை ஏற்படும். இதனால் சபைகளின் தரம் குன்றிடும்.
- பணம், சொத்து, அதிகாரம் ஒரே இடத்தில் குவியும் வாய்ப்புண்டாகும். அதன் விளைவாக தலைவர்களுக்குள் இன்னும் அதிகமாக **பாவம்** பெருகும்.
- எல்லாவற்றிற்கும் மேலாக வேதாகமத்தில் பெரிய அளவில் கூடும் சபைகள் (Mega Church) எங்கு கூறப்பட்டுள்ளது? **வீடுகளில்** சிறிய சபைகளாக கூடினதால் தான் அக்காலத்தில் சபைகளின் எண்ணிக்கை வேகமாக வளர்ந்தது. மட்டுமல்ல உலகமெங்கும் கிளைகள்விட்டு பெருகினது.
- மூலைமுடுக்கெல்லாம் பெருகிவரும் சிறுசபைகள் குறைந்தால் வரும் காலங்களில் இனி சுவிசேஷப் பரவலின் வேகம் தணிந்துவிடும்.
- இதுபோன்ற எண்ணற்ற பல எதிர்மறையான விமர்சனங்களால் **மெகா சபை தவறு** என்று வாதிவிடுவோர் கூறுகிறார்கள்.
- நாம் இப்படி தர்க்கம் செய்து கொண்டே இருக்கும்போதே உலகெங்கிலும் நூற்றுக்கணக்கான மெகா சபைகள் சத்தமில்லாமல் உருவாகின்றன. பல தேசங்களில் பெருகிக் கொண்டே இருக்கின்றன.
- அமெரிக்காவில் மட்டும் குறுகிய காலத்திற்குள் 1750 மெகா சபைகள் உருவாகிவிட்டன. இந்தியாவிலும் ஞாயிறு ஆராதனைகளில் மட்டும் பல ஆயிரம் மக்கள் கூடும் சபைகள் பெருகிக் கொண்டிருக்கின்றன.
- இது சரியா தவறா என்ற கேள்விக்கு ஆராய்ச்சி செய்து நாம் பதில் தேடிக் கண்டுபிடிப்பதற்குள், இந்த விஷயத்தில் உலகில் பலமாற்றங்கள் நடந்துவிடக்கூடும். ஆகவே இது குறித்த வெளிப்படையான விவாதங்கள், மாநாடுகள் தேவை. அது **"சபை வளர்ச்சிக்கான புதிய பார்வையை"** நமக்குத் தரும்.

## I. வேதாகமம் கூறுவது என்ன?

1.சபை கூடுதலின் அவசியத்தையும் கட்டாயத்தையும் வேதாகமம் கூறுகிறது (எபி.10:24,25) ஆனால் அதன் அளவு இவ்வளவுதான் இருக்க வேண்டும் என்று எங்குமே கூறவில்லை.

- ஆகவே 12 பேர் அல்லது குறைந்த அளவு மக்கள் கூடும் சபையே, **சரியான சபை** என்று வாதிடுவதற்கும் வேதாகம அடிப்படை ஏதும் இல்லை.

2.முதல் சபையே மெகாசபை தானே! தேவாலயத்திலும், வீடுகளிலும் கூடினார்கள் என்று பார்க்கிறோம் (அப்.2:46). ஏரோது கட்டின தேவாலயம் என்பது 10க்கு பத்து அளவு, வீட்டில் கட்டப்பட்ட ஆலயம் அல்ல.

- ஏரோது கட்டின ஆலயம் 14 ஹெக்டேர் நிலப்பரப்பில் கட்டப்பட்ட பிரமாண்ட ஆலயம். பண்டிகை நாட்களில் 3-4 லட்சம் மக்கள் கலந்து கொள்வார்கள். அதில் உள்ள புறஜாதிகளின் பிரகாரம் என்ற பிரமாண்ட பகுதியில் புதிய விசுவாசிகள் கூடியிருக்க வேண்டும்.
- 3000, 5000 என்ற கணக்கில் ஒரே நேரத்தில் இரட்சிக்கப்பட்டிருக்கிறார்கள் (அப்.2:4;4:4) அவர்களை பராமரிக்கும் அளவு ஆலய இடம் பெரிதாக இருந்திருக்க வேண்டும். உபத்திரவம் ஏற்படுமுன் 40,000 விசுவாசிகள் எருசலேமில் மட்டுமே இருந்ததாக வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். அவர்கள் அனைவருமே சிறு சிறு வீடுகளில் கூடுவது சாத்தியமில்லை.
- முதல் சபை மெகா சபையாக இருந்தபோதும் அப்.8:4-ன்படி உபத்திரவத்திற்கு பிறகு சிதறடிக்கப்பட்ட பின்பு, கி.பி 315 வரை **பெரிய வழிபாட்டு ஸ்தலத்திற்கு** அவசியமில்லாமல் போயிற்று. அது வரலாற்று நிகழ்வுதானே ஒழிய, சிறிய சபைகளாயிருப்பது, **அவசியம், கட்டாயம்** என்பது தேவ நிபந்தனை அல்ல.

## II. மெகா சபையின் அவசியம்

1. ஒரு பட்டணத்தின் அடையாளமாக மெகா சர்ச் இருக்கிறது. அதேசமயம் மூலைமுடுக்கெல்லாம் சமுதாயத்திற்குள் ஊடுருவும் வாய்ப்புள்ள சிறிய சபைகளும் அவசியம், என்று **Rev.D.மோகன்** (அகில உலக AG சபைகளின் தலைவர்) கூறுகிறார்.
2. உங்கள் சபை மெகா சபையானால் உங்கள் ஊழியத்தின் விளைவுகள் பலமடங்கு அதிகரிக்கும். எந்த ஒரு அனுமதியையும் பெற அதிகாரத்திற்குப் பின் ஓடும் நிலை மாறும், எதிர்ப்புகள் குறையும் என்று கல்வாரி டெம்பிள் சபையின் போதகர் **சதீஷ்** கூறுகிறார் (Hyderabad).
3. 8 லட்சம் விசுவாசிகள் உள்ள சபையை எழுப்பியதும் கர்த்தரே. குறைந்த பட்சம் 2000 பேர் உள்ள மெகா சபைகளை பட்டணம்தோறும் எழுப்பினால்; தேசம் எவ்வளவு விரைவாக ஆசீர்வதிக்கப்படும்?

## III. உங்கள் சபையும் மெகா சபையாகக் கூடிய வாய்ப்புகள் இருக்கின்றது (மூன்றுவித வாய்ப்புகள்)

1. **ஒரே கட்டிடத்தில்** 2000 பேர் கூடி ஆராதிக்கும் நிலையில் வளர்ச்சி அடைந்து, உங்கள் சபையும் மெகா சபையாக மாறமுடியும்.

- பட்டணங்களில் மட்டுமல்ல, சில குறிப்பிட்ட கிராமங்களில் கூட, போதிய இடவசதியும், போக்குவரத்து வசதியும் உள்ள சபைகள் இன்று சராசரி வளர்ச்சியையும் தாண்டி, (AGR 15%) பிரமாண்ட வளர்ச்சி அடைய ஆரம்பித்துள்ளது.
- ஆகவே இதுபோன்று உங்கள் சபையும் பிரமாண்ட சபையாக மாற பிரமாண்டமான கட்டிட வசதிகள், போக்குவரத்து வசதிகள் தேவை. (சங்.2:8).

- ஒரே கட்டிடத்தில் ஒரே நாளில் **பல ஆராதனைகள்** நடத்துவதும் மெகா சர்ச் அமைவதற்கான நல்ல வழி முறையே.
- உங்கள் கட்டிடத்தில் காலி இடங்கள் இருக்கும் போதே, கர்த்தர் நடத்தினால் கூடுதல் ஆராதனைகளை ஏற்படுத்துங்கள்.

2. இரண்டவாதாக அநேக பெரிய சபைகள் அவர்கள் சொல்லும் எண்ணிக்கை, ஒரே இடத்தில் கூடி ஆராதிப்பதை அல்ல. ஒரே ஊரில் பல இடங்களில் கூடுகிறார்கள்.

- உதாரணமாக பால்யாங்கிசோ சபை பிரதான கட்டிடம் உட்பட வேறு 8 இடங்களில் ஞாயிறு அன்று கூடி ஆராதிக்கிறார்கள்.
- **ஒரே போதகர்** இப்போதுள்ள விஞ்ஞான வசதிகளைப் பயன்படுத்தி பல இடங்களில் கூடும் மக்களுக்கு **ஒரே நேரத்தில்** ஆராதனை நடத்துவது பெருகி வருகிறது.
- இவ்விதமான முறைகளைப் பின்பற்றி சபை நடத்துவோ தங்கள் சபைகளை Multi site church என்றும், அவர்கள் தலைமையில் நடத்தப்படும் பல ஆராதனை ஸ்தலங்களை campus என்றும் அழைக்கிறார்கள்.

**3. மூன்றாவது வாய்ப்பு** உங்கள் சபையில் 300 பேர்தான் இன்று இருந்தாலும் உங்கள் சபையில் நீங்கள் உருவாக்கி அனுப்பும் ஊழியர்களாலும், அவர்களின் ஊழிய விளைவுகளைக் கொண்டும் உங்கள் சபை பிரமாண்ட சபையாக மாறலாம். (Mega Church).

- ஒரு அந்திரேயாவின் ஊழிய விளைவு பேதுரு என்றால் பேதுருவின் ஊழியங்களின் விளைவாக ஆயிரக்கணக்கான ஆத்துமாக்கள் கிடைத்தார்கள் (யோ.1:41; அப்.2:41).
- இவ்வளவு பெரிதான இந்த அரிய வாய்ப்பை நழுவவிடாலாமா?

## இறுதியாக

100 புதிய ஆத்துமாக்கள் ஒரே வாரத்தில் தங்கள் சபைக்குப் புதிதாக வந்தாலும், அதே வாரத்தில் அவர்களைச் சந்திக்கும் திட்டம் பெரிய சபைகளுக்கு இருக்கிறது. சபைக்கல்வி அமைப்பும் வலுவாக இருக்கிறது. அநேக சிறிய சபைகளைவிட எண்ணிக்கையில் அநேக சீஷர்களையும், தலைவர்களையும் உருவாக்குகிறார்கள். எனவே சிறிய சபையாயிருக்கும்போது சுவிசேஷத்திற்காக திட்டங்கள், சீஷத்துவ அமைப்பை வலுப்படுத்த வேண்டும். பெரிய சபைகளைக் குறித்த தவறான கருத்துக்களை அகற்றி உங்கள் சபை பெரிய சபையாக வேண்டும் என்று விரும்புங்கள்.

## விசுவாசியுங்கள்

இன்று நடத்திக்கொண்டிருக்கும் உங்கள் சிறிய சபையையே பெரிய சபையாக மாற்றும் வாய்ப்புகள், வாக்குத்தத்தங்கள் (ஏசா.2:1-3) திரளாக இருக்கும்போது பயன்படுத்திக் கொள்ளுங்கள். போதகர் ஆன்ட்ருஸ் அவர்கள் (Rev.ஆபிரகாம் தாமஸ் அவர்களுடைய தகப்பனார்) நடத்தி வந்தது ஒரு சிறிய சபையே. ஆனால் அநேக மெகா சபைகளின் போதகர்களை அவர்கள் காலத்தில் அவர்கள் உருவாக்கிச் சென்றிருக்கிறார்கள். எனவே உங்கள் சபையை சாதாரணமாக நினைக்க வேண்டாம். உங்கள் சபையும் அதுபோன்று ஒரு சரித்திரத்தை படைக்கட்டும்.



கர்த்தரின் ஈவாகிய இனிய மணவாழ்வு-2

# நம் சொந்தத் திராட்சத் தோட்டத்தைக் காத்துக்கொள்வது எப்படி?

Rev. Dr.T.S. ராஜசேகர்
அகில இந்திய ஏ.ஜி பொது நிர்வாகக் குழு உறுப்பினர்

தேவனிடமிருந்து மிகுதியான ஞானத்தையும், புத்தியையும் கடற்கரை மணலத்தனையான மனோவிருத்தியையும் பெற்றுக்கொண்ட சாலொமோன் எழுதிய பாடல்கள் ஆயிரத்து ஐந்து என்று (1 இராஜா.4:2932) வேதம் கூறுகிறது. அப்பாடல்களில் மேன்மையான பாடல்களான ஐந்தை உன்னதப்பாட்டு நூலில், நமது மணவாழ்வு இனிமையானதாக அமைய வழிகாட்டியாக வேதத்தில் ஆவியானவர் இணைத்துள்ளார். முதலாவது இப்பாடல்களின் நேரடிப்பொருளை அறிந்து கணவனும் மனைவியும் தங்கள் மணவாழ்வில் கடைபிடிக்க வேண்டும். பின்னர், அடையாளமாகப் பொருள்படுத்தி இயேசுவுக்கும் நமக்கும் உள்ள உறவில் வளர வேண்டும்.

சென்ற இதழில், உன்.1: 1-4 வரையுள்ள முன்னுரைப் பகுதியின் பொருளைக் கற்றோம். இந்த இதழில் உன்.1:5-2:7 வரையுள்ள முதல் பாடலின் பொருளைக் கற்போம்.நமது வேதாகமத்தில் வசன வடிவில் அச்சிடப்பட்டுள்ள இப்பாடலைக் கவிதை வடிவிலும், எந்த வரிகள் தலைவன் (கணவன்) கூறுவது, எந்த வரிகள் தலைவி (மனைவி) கூறுவது என்று வேறுபடுத்திக்காட்டி கீழே கொடுத்துள்ளேன்.

**முதல்பாடல்- 1:5 - 2:7**

தலைவி

1:5 எருசலேமின் குமாரத்திகளே!
கேதாரின் கூடாரங்களைப் போன்று நான் கறுப்புதான்.
இருந்தாலும், சாலமோனின் திரைகளைப் போன்று அழகாயிருக்கிறேன்,

1:6 நான் கறுப்பாயிருக்கிறேன் என்று பாராதீர்கள்;
சூரிய ஒளி என்மேல் பட்டது.
என் தாயின் மகன்கள் என்மேல் கோபமாயிருந்தனர்.
அவர்கள் என்னைத் திராட்சத் தோட்டங்களைக் காவல்காக்க வைத்தனர்.
என் சொந்தத் திராட்சத் தோட்டத்தையோ நான் காக்கவில்லை.

1:7 என் உயிரின் நேசரே!
உமது மந்தையை எங்கே மேய்க்கிறீர்?
மதிய வேளையில் அதை எங்கே ஓய்வெடுக்க அமர்த்துகிறீர்?
என்பதை எனக்குத் தெரிவியும்.
நான் ஏன் உமது தோழர்களிடம் அலைந்து திரிய வேண்டும்?

தலைவன்

1:8 பெண்களில் மிகவும் அழகானவளே! நீ அதை அறியாவிட்டால்
மந்தைகளின் தடத்தைப் பின்தொடர்ந்து செல்.
மேய்ப்பர்களின் கூடாரங்கள் அருகில்
உன் ஆட்டுக்குட்டிகளை மேய்த்துக்கொள்.

1:9 என் பிரியமே!
நான் உன்னைப் பார்வோனின் இரதக் குதிரைகளினிடையில் உள்ள
பெண் குதிரையைப் போன்று காண்கிறேன்.

1:10 உன் கன்னங்கள் காதணிகளாலும்
உன் கழுத்து அணிகலன்களாலும் மிகவும் அழகாய்த் தெரிகின்றன.

1:11 உனக்கு வெள்ளி பதிக்கப்பட்ட
பொன் நகைகளைச் செய்வோம்.

தலைவி

1:12 அரசர் தம் பந்தியிலிருக்கும்போது
என் வாசனைத் தைலம் நறுமணம் வீசியது.

1:13 என் நேசர் என் மார்பகங்கள் நடுவில்
வாசனைத் திரவியப் பையாக இருக்கிறார்.

1:14 என் நேசர் என்கேதி ஊர் திராட்சத் தோட்டங்களிலுள்ள
மருதோன்றிப்பூங்கொத்தாக உள்ளார்.

தலைவன்

1:15 என் பிரியமே! நீ மிகவும் அழகானவள்
மிகவும் அழகானவள்; உன் கண்கள் படப்படக்கும் புறாக்கள்.

தலைவி

1:16 என் நேசரே! நீர் அழகானவர்
நீர் வசீகரமானவர்.
நமது படுக்கை பசுமையானது;

1:17 நமது வீட்டின் உத்திரங்கள் கேதுரு மரம்;
நமது விட்டங்கள் தேவதாரு மரம்.

2:1 நான் சாரோன் சமவெளியின் புல்வெளிப்பூ;
பள்ளத்தாக்குகளின் வெண்மலர்.

தலைவன்

2:2 முட்களினிடையிலுள்ள வெண்மலர் போன்று
இளம் பெண்களுக்குள் எனக்குப் பிரியமானவள் இருக்கிறாள்.

தலைவி

2:3 காட்டு மரங்கள் மத்தியில் ஒரு கனிமரமாக
இளைஞர் மத்தியில் என் நேசர் இருக்கிறார்.
அவரது நிழலில் நான் மகிழ்ந்திருக்கிறேன்.
அவர்தரும் கனி என் ருசிக்கு இனிமை.

2:4 அவர் என்னை விருந்து மண்டபத்திற்கு அழைத்துச் சென்றார்.
என் மேல் அவர் அன்பு கொடியாகப் பறந்தது.

2:5 உலர் திராட்சைகளால் என்னை பெலப்படுத்துங்கள்.
கனிவகைகள் என்னைப் புதுப்பிக்கட்டும்!
நான் அவர் அன்பில் மயங்கியிருக்கிறேன்.

2:6 அவரது இடதுகையால் என் தலையைத் தாங்கி
அவரது வலது கையால் என்னை அணைத்துக்கொள்கிறார்.

தலைவன்

2:7 எருசலேமின் இளம்பெண்களே!
அதற்கான நேரம் வரும்வரை நேசத்தைத் தூண்டாதிருக்கக்
கலைமான்கள் மற்றும் காட்டுப்பெண்மான்கள் மேல் ஆணையிட்டு
வேண்டுகிறேன்.

இப்பாடலின் துவக்கத்தில் தலைவி தன் தற்கால நிலைக்குக் (கறுப்பாயிருத்தல்) காரணம், "என் சொந்தத் திராட்சத் தோட்டத்தையோ நான் காக்கவில்லை" என்று கூறுகிறாள், நமது மணவாழ்வும் நாம் அதனைச் சரியாகக் காக்கவில்லையென்றால் அலங்கோலமாகிவிடும் (கறுத்துப்போய் விடும்). நமது மணவாழ்வு அலங்கோலமான பின் அங்கலாய்த்துப் பிறர் மீதும், சாத்தான் மீதும், தேவன் மீதும் குற்றம் சாட்டுவதை விட, இப்பாடல் காட்டும் வழியில் நம் சொந்தத் திராட்சத் தோட்டமாகிய நமது மணவாழ்வைக் கருத்தாகக் காத்துக்கொள்ள வேண்டும். அதற்கான வழிகளை இப்பாடல் சுட்டிக் காட்டுகிறது. அவற்றை ஒவ்வொன்றாகக் கற்றுக் கொள்வோம்.

**1.தனது நிறைகுறைகளையும், பிறந்த வீட்டின் குறைகளையும் அறிதல்** 1:5,6

பொதுவாகத் தனது நிறைகளையும் பிறரது குறைகளையும் காண்பதே வீழ்ச்சியடைந்த மனித இயல்பு. இந்த வீழ்ச்சியடைந்த மனித இயல்பின் விளைவாகத்தான் கணவன் மனைவி உறவில் ஒருவரையொருவர் குறை கூறுவதையும், ஒருவரை மற்றவர் திருத்த முயன்று தோல்வியடைவதால் மணவாழ்வில் விரிசல் ஏற்படுவதையும் காண்கிறோம். மத்.7:3-5ல் இயேசு கற்பித்தபடி முதலில் தன்னிலுள்ள குறைகளைக் கண்டுபிடித்து அகற்ற முயலும். எனவே. கணவனும், மனைவியும் ஒருவரை மற்றவர் திருத்த முயல்வதைவிட தன்னையே திருத்த வேண்டும். இவ்வாறு செய்வதால் இருவருமே திருந்த, மணவாழ்வு சிறக்கும்.

தனது குறைகளை மட்டுமே அறிந்திருப்பது தாழ்வு மனப்பான்மையையும், ஒதுங்கும் இயல்பையும் கொண்டு வந்து நமது பொறுப்பை நாம் சரியாக நிறைவேற்றவிடாமல் தடுத்துவிடும். எனவே, நம்குறைகளை அறிவதோடு நமது நிறைகளையும் அறிந்து அதற்காக தேவனுக்கு நன்றிகூற வேண்டும். இதில் மாய மானதாழ்மை வேண்டாம், நான் கறுப்பாயிருந்தாலும் அழகாயிருக்கிறேன் என்று தனது குறைகள் எவை தனது நிறைகள் எவை என்று யதார்த்தமாக அறிந்திருக்க வேண்டும்.

தனது நிறைகளையும், துணையின் குறைகளையும் பார்ப்பது போன்றே, தான் பிறந்த குடும்பத்தின் நிறைகளையும், தான் இணைந்த குடும்பத்தின் குறைகளையும் பார்ப்பதும் மணவாழ்வின் இனிமையைக் கெடுக்கும். எனவே, நாம் பிறந்த குடும்பத்தின் குறைகளையும் அறிந்திருப்பது, நாம் இணைந்துள்ள குடும்பத்தையும் அதன் நிறைகுறைகளோடு ஏற்றுக்கொள்ள உதவும்.

**2.நமது கடந்த காலம் நமது தற்காலத்தையும் எதிர்காலத்தையும் பாதிக்க அனுமதியாதிருத்தல்**

தனது தாயின் பிள்ளைகளின் கோபம் (பாரபட்சம்), வெயிலின் பாதிப்பு (சரியான வாய்ப்பு கிடைக்காமை) இவற்றால் நான் கறுத்துவிட்டேன். இனி இப்படியே

இருக்க வேண்டியதுதான் என்றிருப்பது நமது தற்காலத்தைப் பாதித்து குடும்பத்தின் எதிர்காலத்தையும் பாதிக்கும்.எனவே, நமது கடந்தகாலம் எப்படியிருந்தாலும் (முழு நிறைவான கடந்தகாலம் பெற்றவர் யாரும் இவ்வுலகில் இல்லை) தேவ உதவியோடு திருப்தியான தற்காலத்தையும், நம்பிக்கையான எதிர்காலத்தையும் அடைய முடியும். இதுவே நமது சொந்தத் திராட்சத் தோட்டமான மணவாழ்வைக் காக்கும் இரண்டாவது வழி.

### 3.நடவடிக்கைகளில் வெளிப்படைத் தன்மையும், பொறுப்புகளில் பங்களிப்பும் 1: 7,8

தனது ஆத்தும நேசர் எங்கே செல்கிறார், என்ன செய்கிறார் என்று அறியாததால் தலைவி, தோழர்கள் மத்தியில் அவமானமடைய நேர்கிறது. தலைவனோ, அதை நீ ஏன் அறிய வேண்டும்? என்று எதிர்க்கேள்வி கேளாமல், தான் எங்கே, என்ன செய்கிறேன் என்பதைத் தெரிவித்து, நீயும் என்னோடு வந்து பங்கெடு என்று கூறுகிறார். இதுபோலவே, நமது மணவாழ்வு இனிமையாக அமைய கணவன், மனைவி தங்கள் நடவடிக்கைளில் ஒளிவு மறைவு இல்லாதிருக்க வேண்டும், தனது செயல்பாடுகள், தொடர்புகளைத் தன் துணைக்குத் தெரியாமல் இரகசியப்படுத்துவது சந்தேகத்திற்கு வித்திட்டு முடிவில் அவமானத்திற்கு உள்ளாக்கும்,

திருமணத்தின்போது, “என் கரத்தினால் உன்னை மேன்மைப்படுத்தி, எனக்கு உண்டான உலக சொத்துக்களையெல்லாம் உனக்கு சுதந்தரமாகக் கொடுக்கிறேன்” என்று வாக்குக் கொடுக்கிறோம். அதை மீறி நமது உறவுகளிலும், பண வரவு செலவுகளிலும் வெளிப்படைத் தன்மையின்றி இரகசியம் காத்தால் மண உறவில் விரிசலை அனுபவிப்பதோடு, நம் வாக்கிற்கு சாட்சியாக இருக்கும் தேவனுக்குக் கணக்கு கொடுக்க வேண்டியிருக்கும்.

### 4. ஒருவரையொருவர் பாராட்டுதல் 1: 9,10

பாராட்டுவதும், பாராட்டை ஏற்பதும் பாவமல்ல. அது தேவன் நமக்குக் கொடுத்துள்ள இயல்பான சுபாவங்களில் ஒன்று. பாராட்டினால் பெருமை வந்து விடும் என்று, கொடுக்க வேண்டிய பாராட்டைக் கொடாதிருப்பதும், பாராட்டைப் பெற வேண்டும் என்பதற்காகவே செயல்படுவதுமே தவறான செயல்முறைகள். கணவனும் மனைவியும் ஒவ்வொருவரின் நற்செயல்களைக் கண்டு தாராளமாகப் பாராட்ட வேண்டும், இதுவே, மேலும் நற்செயல்களிலும், நற்குணங்களிலும் முன்னேற வழி வகுக்கும். பின்னர், குழந்தைகளை வளர்ப்பதிலும் பேருதவியாக இருக்கும். தனது வாழ்க்கைத் துணையின் நற்செயல்களைச் சாதாரணமாக எடுத்துக்கொண்டு, அவர்கள் முன்னிலையிலேயே மற்றவர்களைப் பாராட்டுவது இனிமையாக இருக்க வேண்டிய மணவாழ்வில் கசப்பைக் கொண்டுவரும்.

### 5. ஒருவருக்கொருவர் பரிசளித்தல் 1: 11

கணவனும். மனைவியும் முயற்சி எடுத்து ஒருவருக்கொருவர் ஏற்ற பரிசுகள் கொடுப்பது, நமது பாராட்டுக்கள் வெறும் வார்த்தைகள் அல்ல, உண்மையானவை என்று காட்டும். இப்பரிசுகள் விலை உள்ளவையாக இருக்க வேண்டும் என்பது அவசியமல்ல. இக்காரியத்திற்காக உன்னை/உங்களைப் பாராட்டுகிறேன் என்று அழகாக எழுதிக்கொடுப்பது கூட விலையில்லாத பரிசுதான். தன் துணைக்கு நேரம் கொடுப்பது வேறு யாரும் கொடுக்க முடியாத பரிசு. அவர்களுக்கு விருப்பமானதை, அவர்கள் எதிர்பாரா நேரத்தில் கொடுத்து ஆச்சரியப்படுத்துதல் மணவாழ்வை மகிழ்ச்சியானதாக்கும்.

### 6. உணவு நேரத்தையும் படுக்கை நேரத்தையும் மகிழ்ச்சியானதாக்குதல் 1: 12-16a

உணவருந்தும் நேரத்தில் உள்ளம் மகிழ்ச்சியோடிருப்பது உடலுக்கும் உறவுக்கும் நன்மையானது. அப்பொழுது குறை கூறுவதும், கோபப்படுவதும் மணவாழ்வின் இனிமையைக் கெடுக்கும். அவ்வாறே, எபே.4:26ல் கூறியுள்ளபடி, சூரிய அஸ்தமனத்தோடு எரிச்சல்களையெல்லாம் சரிசெய்துவிட்டு மனமகிழ்வோடு படுக்கைக்குச் செல்ல வேண்டும். கருத்து வேறுபாடுகளைச் சரிசெய்து, திறந்த உள்ளத்தோடு ஒருவரையொருவர் பாராட்டுவது, படுக்கையறையிலும் காணப்படவேண்டும். அதுவே முழுமையான இன்பத்தைக் கொடுக்கும்.

### 7. சாதாரண சூழ்நிலையை திருப்தியோடு ஏற்றுக்கொள்ளல் 1:16b-17

"நம்முடைய மஞ்சம் பசுமையானது,
நம்முடைய வீட்டின் உத்திரங்கள் கேதுரு மரம்,
நம்முடைய மச்சு (விட்டம்/கூரையின் குறுக்கு மரங்கள்) தேவதாருமரம்".

என்ற வரிகள் மாளிகையில் வாழ்பவர்களின் வார்த்தைகள் அல்ல, மரத்தடியில் புல்தரையில் படுத்திருந்தவர்களின் வார்த்தைகள்.

தனது கணவரை அரசனாகவும், தன் மனைவியை ரூபவதியாகவும் காணும் கண்கள், தன் வீட்டுச் சூழ்நிலையைக் கண்டு சலிப்படைந்து அதிருப்தி அடையாது. நமது சூழ்நிலையை திருப்தியோடு ஏற்றுக்கொள்வது, நமது வாழ்க்கைத் தரம் உயர்வதற்கு அடிப்படையாக அமையும். அடுத்தவர்கள் அநுபவிப்பதைக் கண்டு நாமும் (கடன் எடுத்தாவது) அவர்களைப் போலாகவேண்டும் என்று செயல்படுவது நமது நிம்மதியைக் குலைக்கும். இப்பொழுது இருப்பதை ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் இல்லாவிடில் திருப்தி என்றுமே, எதிலுமே கிடைக்கப் போவதில்லை.

### 8. சாதாரணத் தன்மையிலும் சிறப்பைக் கண்டு மகிழ்தல் 2:1-3

நான் சாரோனின் புல்வெளிமலர் (ரோஜாமலர் இஸ்ரவேல் நாட்டிலுள்ள மலர் அல்ல) பள்ளத்தாக்குகளின் வெண்மலர் (லில்லியும் மொழிபெயர்ப்பாளர்கள் கொடுத்தபெயர்) என்ற வரிகள் தலைவி தன்னைப் பற்றிக்கூறும் வார்த்தைகள். அந்த சாதாரணத் தன்மையே சிறந்ததென அடுத்த வசனத்தில் தலைவன் கூறுகிறான். ஏற்கனவே கூறியபடி நாம் யாரும் பூரண அழகோ, பூரண நிறைவோ உடையவர்கள் அல்லர். நமது பொதுவான நிலையை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்படியிராமல், செயற்கை முறையில் நம்மை அழகாகக் காட்ட முயல்வது மற்றவர்களை ஏமாற்ற முயன்று நம்மையே ஏமாற்றும் செயலாகும். "நீ அவளைப்போல்; இல்லை இவளைப்போல் இல்லை" என்பது நமது உள்ளமே சரியில்லை என்பதையே காண்பிக்கிறது. கணவன் மனைவியை இருக்கிறபடியே பிரியமானவளாக ஏற்றுக்கொள்வது, அவளும் அவரை வாஞ்சையோடும், இனிமையோடும் ஏற்க உதவும்.

### 9. அன்போடு அரவணைத்துப் புத்துணர்ச்சி அளித்தல் 2:4-6

மணவாழ்வு என்றைக்கும் ஒரே மாதிரியாக இருந்து அலுத்துப்போகாதிருக்க, அவ்வப்போது சிறப்பு நிகழ்ச்சிகளைத் திட்டமிட்டு, கணவனும் மனைவியும் ஒருவர் மீது ஒருவருக்கு இருக்கும் அன்பையும் அக்கறையையும் புதுப்பிக்க வேண்டும்.

வெளியிடங்களுக்கு சுற்றிப்பார்க்கச் செல்வது, சிறந்த உணவை வாங்கி உண்பது போன்றவை, சோர்வடையும் நேசத்தைப் புதுப்பித்து பலப்படுத்தும். ஆனால், சிறப்பு நிகழ்ச்சிகள் அன்பை வெளிப்படுத்துவதாகத்தான் இருக்கவேண்டுமே தவிர, ஆடம்பரத்திற்காக மாறிவிட்டால் பொருளாதார நிலையைப் பாதித்து, சீரழிவிற்கும் வழிவகுக்கும்.

**10. பிறருக்கு வழிகாட்டுதலும் பிறர் குறுக்கீட்டைத் தவிர்த்தலும்** 2:7

இக்கவிமேலும் இருபாடல்களின் கடைசிக்கவியாகப் பயன்படுத்தப் பட்டுள்ளது. மணவாழ்வு இனிமையானது என்றாலும் அதற்கான முதிர்ச்சியை அடையும் வரை, ஆண் பெண் உறவின் ஈர்ப்புக்குகாலத்திற்கு முன்பே ஆளாகக்கூடாது என்பது தேவதிட்டம், ஆனால், வீழ்ந்துவிட்ட மனித இயல்பு மணவாழ்வின் அர்ப்பணிப்பு இல்லாமலே பாலுறவை அனுபவிக்கப் பல்வேறு உபாயங்களைக் கையாள்கிறது. எனவே, தேவ வழிகாட்டியாகிய வேதம், அதற்கான நேரம் வரும்வரை நேசத்தை எழுப்பக்கூடாது என்று மூன்றுமுறை கூறுகிறது (3:5; 8:4)

மேலும், கணவன் மனைவி உறவு வலிமையானதாகவும், இனிமையான தாகவும் விளங்க மணவாழ்வில் பிறரின் குறுக்கீடுகளை அனுமதிக்கக்கூடாது. தேவபிள்ளைகளாகிய நாம் மதித்து நடப்பவையும், உலகம் மதிப்பதும் முற்றிலும் வேறுபட்டவை. மனிதருக்குள் மேன்மையாக எண்ணப்படுவது தேவனுக்கு முன்பாக அருவருப்பாயிருக்கிறது (லூக் 16:15) என்று வேதம் கூறுகிறது, உறவினர், அயலகத்தார், நண்பர்கள், தொலைக்காட்சித் தொடர்கள், வல்லுநர்கள் என அழைக்கப்படுபவர்கள் அனைவரும் வேதத்திற்கு முரணான கருத்துக்களை நம்மில் விதைக்கக் கூடும். எனவே, கலைமான்கள், வெளிமான்கள் மீது ஆணையிடுவது போன்று திட்டவட்டமாகப் பிறர் குறுக்கீட்டை மணவாழ்வில் அனுமதிக்கக்கூடாது.

மேற்கூறப்பட்ட பத்து முறைகளையும் ஒரே நாளில் உடனடியாகச் செயல்படுத்தாவிட்டாலும், இவற்றை நன்றாக மனதில் பதித்து தேவ உதவியோடு, நம்முடைய பழக்கமாக்கிக் கொண்டால், தேவன் நமக்குக் கொடுத்துள்ள நம் சொந்தத் திராட்சத் தோட்டமாகிய நம் மணவாழ்வைப் பேணிப் பாதுகாத்து இனிய மணவாழ்வை அனுபவிக்கலாம்.

---


## பரிபூரண ஜீவன் பத்திரிக்கை சந்தா மற்றும் உதவித் தொகை அனுப்ப வேண்டிய விபரம்

குறிப்பு: காசோலை / டிராப்ட் எடுக்கும்போது Tamil District Council of SIAG என்று எடுத்து பரிபூரண ஜீவன் பத்திரிக்கைக்கு என்று குறிப்பிட்டு அனுப்பவும். மணியாடர் அனுப்புவதை தவிர்க்கவும். பத்திரிக்கை ஊழியத்திற்கு மணியாடர் மூலம் தான் அனுப்ப முடியும் என்ற நிலையில் உள்ளவர்கள் கீழ்காணும் முகவரிக்கு அனுப்பவும்.

**ஏ.ஜி. தலைமை அலுவலகம்**

30, நாவலர் நகர், மதுரை–625 016. போன் : 0452 2301165.



# விடுதலை பெற்றவர்கள் விடுதலையின் செய்தியை அறிவிக்கிறவர்கள்

Rev. E. ஜெகில் எபிதாஸ்
உதவி இயக்குநர், வடகிழக்கு மிஷனரி ஊழியம்

TAMIL DISTRICT MISSIONS India and beyond...

வாசகர்கள் அனைவருக்கும் மிஷனரி ஊழியத்தின் சார்பாக கிறிஸ்துமஸ் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

**1. கட்டப்பட்ட மனிதர்களிடம் செல்லுங்கள்**

"பின்பு கலிலேயாவுக்கு எதிரான கதரேனருடைய நாட்டில் சேர்ந்தவர்கள் அவர் கரையிலிறங்கினபோது. நெடுநாளாய், பிசாசுகள் பிடித்தவனும், வஸ்திரந்தரியாதவனும், வீட்டில் தங்காமல் பிரேதக் கல்லறைகளிலே தங்கினவனுமாயிருந்த அந்தப் பட்டணத்து மதிலின் ஒருவன் அவருக்கு எதிராக வந்தான்" (லூக்கா 8:26,27).

நாம் புறப்பட்டு கிராமங்களுக்கு செல்லும்போது, பாவங்களிலும் பிசாசின் பிடியிலும் கட்டப்பட்ட மக்களை சந்திக்க தேவன் கிருபை செய்வார், புறப்பட்டு போங்கள்.

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, வருடத்திற்கு ஒருமுறையாவது பத்து நாட்கள் வட இந்தியா குறுகிய கால மிஷன் ஊழியத்திற்கு செல்ல அர்ப்பணியுங்கள், வட இந்தியாவின் பீகார் மாநிலத்தில் ஒன்பது மாவட்ட தலை நகரங்களில் ஒரு சபை கூட இல்லை. 1.கைமூர், 2.லக்ஷிராய், 3.பங்கா, டார்பாங்கா, 5.ரோவற்டால், 6.கஹாரியா, 7.பாவூவா, 8.ஒரைஸ்காபாத் ஆகிய இந்த எட்டு இடங்களில் சபைகள் ஆரம்பிக்கப்பட, மிஷனரிகள் அனுப்பப்பட ஜெபியுங்கள்.

பின்பு இயேசு சகல பட்டணங்களையும் கிராமங்களையும் சுற்றி நடந்து, ஜெப ஆலயங்களில் உபவாசித்து, ராஜ்யத்தின் சுவிசேஷத்தை பிரசங்கித்து, ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும், சகல நோய்களையும் நீக்கி, அவர்களை சொஸ்தமாக்கினார், அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போலத், தோய்ந்துப் போனவர்களும் சிதறப்பட்டவர்களுடைய இருந்தபடியால், அவர்கள்மேல் மனதுருகி, தம்முடைய சீஷர்களை நோக்கி: அனுப்புமிக்க வேலையாட்களோ கொஞ்சம்; ஆதலால், அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள் என்றார் (மத்தேயு 5:35-38).

அன்பானவர்களே, இயேசுவை அறிவிக்க கட்டப்பட்ட மக்களை விடுவிக்க அபிஷேகம் பெற்ற அர்ப்பணிக்கப்பட்டவர்கள் புறப்பட்டு செல்லவேண்டும். நீங்கள் குறுகிய கால மிஷனெரி பயணம் செல்ல, பணித்தளங்களில் உள்ள மிஷனெரிகளோடு ஒருவாரம் தங்கி ஜெபநடை, நற்செய்தி ஊழியங்களை செய்ய கீழே கொடுக்கப்பட்டுள்ள ஊழியர்களை தொடர்பு கொள்ளுங்கள். நீங்கள் விரும்பும் மாநிலங்களுக்கு சென்று ஊழியம் செய்ய நாங்கள் உதவி செய்ய ஆயத்தமாயிருக்கிறோம்.

**2.** சம்பவித்ததைக் கண்டு, ஓடிப்போய், பட்டணத்திலும் சுற்றுப்புறங்களிலும் அறிவித்தார்கள் (லூக்கா 8.34).

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே விடுதலையாக்கப்பட்டவர்களுக்கு சம்பவித்தவைகளை கண்டு அநேகர் இயேசுவிடம் வருவார்கள்.

அற்புதங்களினாலும் அடையாளங்களினாலும் இயேசுவே சர்வ வல்லமையுடைய ஆண்டவர் என்பதை அனைவரும் அறிந்து கொள்வார்கள். தேவன் உங்களுக்கு கொடுத்திருக்கும் வரங்களை கர்த்தருக்காய் உபயோகிங்கள்.

**அறிவிக்கிறவர்கள் தேவை**

பிசாசுகள் பிடித்திருந்தவன் சொஸ்தமாக்கப்பட்டதை கண்டவர்களும் அதை அவர்களுக்கு அறிவித்தார்கள் (லூக்கா 8:36).

வட மாநிலங்களில் நாம் சென்று இயேசுவை அறிவிக்கும்போது அற்புதங்கள் நடைபெற ஜெபியுங்கள். அற்புதங்களை பெற்ற ஜனங்கள் அறிவிக்கிறவர்களாக மாறுவார்கள்.

பிசாசுகள் நீங்கின மனுஷன் அவரோடே கூட இருக்கும்படி உத்தரவு கேட்டான். இயேசு அவனை நோக்கி, நீ உன் வீட்டுக்கு திரும்பப்போய், தேவன் உனக்கு செய்தவைகளையெல்லாம் அறிவி என்று சொல்லி, அவனை அனுப்பிவிட்டார்.

அந்தப்படி அவன்போய், இயேசு தனக்கு செய்தவைகளையெல்லாம் பட்டணத்தில் எங்கும் பிரசித்தப்படுத்தினான் (லூக்கா 8:38,39).

விடுதலையாக்கப்பட்டவன் விசுவாசியாய் மாறி இப்பொழுது ஊழியனாக அந்த கிராமத்திற்கு அனுப்படுகிறான்.

தேவன் தாமே வடஇந்தியாவில் அநேக சுதேச மிஷனரிகளை அனுப்ப ஜெபியுங்கள். ஒரு சுதேச மிஷனரிகள் ஒரு மாதம் 5000 ரூபாய் கொடுத்து தாங்குங்கள். அவருடைய குடும்ப புகைப்படம், ஊழிய பணித்தள விபரங்களை உங்களிடம் தருகிறோம். மிஷனரிகளுக்காய் ஜெபியுங்கள்.

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

---

தாங்கள் பரிபூரண ஜீவன் பத்திரிக்கை மூலமாக ஆசீர்வதிக்கப்பட்டிருந்தால் உங்கள் சாட்சிகளை வாட்ஸ்அப் மூலமாகவோ, தபால் மூலமாகவோ தெரிவிக்கலாம். மேலும் ஆவிக்குரிய ஜீவியத்திற்கு பயனுள்ள செய்திகள், துணுக்குகள் ஆகியவற்றையும் அனுப்பலாம்.

**நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி**

**Rev. JERRY DANIEL**
303, C Block, Roshan Residency,
6, VOC Road, Cantonment, TRICHY - 620 001
Cell : 94434 15484

## ஜெபியுங்கள் ! தாங்குங்கள் !!

பரிபூரண ஜீவன் பத்திரிக்கை ஊழியத்தின் மூலம் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பீர்கள், எனவே உங்கள் சாட்சிகளை எழுதி அனுப்புங்கள். பத்திரிக்கை ஊழியத்தின் தேவையை சந்திக்க ஒரு வெளியீட்டிற்கு ஆகும் செலவு ரூ.**1,25,000** உதாரத்துவமாய் கொடுத்து உதவுங்கள் அல்லது உங்களால் இயன்ற அளவு கொடுத்து பத்திரிக்கை ஊழியத்தை தாங்குங்கள். இவை எல்லாவற்றிக்கும் மேலாக தொடர்ந்து இந்த ஊழியத்திற்காக ஜெபியுங்கள் நன்றி.



# கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்

ரோமர் 12:11

**Rev. D. சாலமோன்**

தலைவர், கிறிஸ்துவின் ஸ்தானிகர்கள் வாலிபர் ஊழியம்

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே, கிறிஸ்துவின் ஸ்தானிகர் இயக்கத்தின் மூலம் அன்பின் வாழ்த்துக்கள். இந்த எழுத்துக்கள் மூலமாக உங்களோடு பேசுவதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றோம். 2 இராஜா.5-ம் அதிகாரத்தில் நாகமான் சீரியா தேசத்தின் படைத்தலைவன் குஷ்டரோக வியாதியிலிருந்து சுகம் அடைந்த சம்பவம் கூறப்பட்டுள்ளது. ஊழியத்தில் கர்த்தருடைய இரட்சிப்பு வெளிப்பட்ட விதத்தையும் அதற்கு காரணமாக இருந்தவர்களையும் குறித்து தியானிப்போம்.

**1.எலிசா :** உன்னதமான தேவனுக்கும் இஸ்ரவேலின் தீர்க்கதரிசியான எலியாவிற்கும் ஊழியக்காரனான எலிசா, தேவனுக்கு முன்பாக நிற்கிறவர், உண்மையுள்ளவர். இரட்டிப்பான வரங்களைப் பெறுவதில் விடா முயற்சி உடையவர், மனிதனைப் பிரியப்படுத்தாமல், தேவனைப் பிரியப்படுத்தியவர், தேவனை முற்றிலும் சார்ந்து பண ஆசையில்லாமல் மனநிறைவுடையவர் தமது முன்னோடியாகிய எலியாவிடமிருந்து சிறந்த பாடங்களை கற்றுக் கொண்டவர். உண்மை சீஷனாய் எல்லாவற்றையும் இழந்தவர்.

1 இராஜா.20:7-ல் சீஷத்துவத்தின் குணங்கள் உடையவராய், எல்லாரையும், எல்லாவற்றையும் விட இயேசுவை அதிகமாய் நேசித்த சிறந்த தேவ ஊழியன். தேவனுடைய ஊழியம் என்பது அன்பு, பரிசுத்தம், சகிப்பு, மனதுருக்கும், தியாகம், உத்தமம், உண்மை, சீஷத்துவம், தேவனை அறிதல், தேவனை அறிவித்தல் போன்றவைகளை உள்ளடக்கியது. வல்லமையையோ, பிரபல்யத்தையோ சார்ந்ததல்ல என்ற தெளிவோடு, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கி தொடருகிறேன் என்ற வேத வசனத்தின்படி இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தை நிறைவேற்றியவர் எலிசா.

**2.பெயர் குறிப்பிடப்படாத சிறு பெண்** (2இராஜா.5:2,3): நாகமானால் அடிமையாகப் பிடிக்கப்பட்டவள், நாகமானின் மனைவிக்கு பணிவிடை செய்தவள். Teen Age வயதில் தேவனின் அன்பையும் கிறிஸ்தவத்தின் அஸ்திபாரங்களாகிய தேவனுடைய வார்த்தைகளை விசுவாசித்தல், தேவனுடைய ஊழியர்கள் குறித்த உயர்ந்த எண்ணம், ஆத்தும பாரம், சத்துருக்களை நேசித்தல் போன்றவற்றை பெற்றோரரிடம் கற்றுக்கொண்டாள். நாளைய உயர்வு இன்றைய கற்றலைப் பொருத்தே அமையும். வாலிபர்கள் எதிர்கால நித்தியத்தை இழந்துவிடக்கூடாது.

குடும்பத்தை விட்டு பிரிந்த வேதனையுடன் வாழ்ந்தாலும், தான் இருந்த சூழலைக் குறித்த அறிவுடையவளாக வாழ்ந்தாள். நாகமானின் கஷ்டத்தை அறிந்த இஸ்ரவேலின் சிறு பெண் தேவனுடைய மனுஷனாகிய எலிசாவைப் பற்றி தன் எஜமானிடம் தெரிவித்தாள். பழிவாங்காத கிறிஸ்தவின் சிந்தை உடையவள். நாகமானின் மரணத்திற்காக ஜெபிக்காமல், எதிரி வேதனைப்படும்போது சந்தோஷப்படாமல், கரிசனையோடு தன் வாலிப பருவத்தில் செயல்பட்டாள். தேவையும் சவாலும் நிறைந்த இந்த வாலிபர் சமுதாயத்தில் தேவ இராஜ்யத்தின் பணியை அவருடைய பெலத்தின்படியே வாலிபர் செயல்பட வேண்டிய அவசியத்தை இந்த வாலிப மகள் இக்கால திருச்சபை வாலிபர்களுக்கு சாட்சியாக இருக்கிறாள்.

**3.நாகமான் - சீரிய ராஜாவின் படைத்தலைவன் :** நாகமான் அரசியல் செல்வாக்கு உடையவர், அதிகாரமுடையவர், பெரிய மனுஷன், எண்ணிக்கையுள்ளவன். மகா பராக்கிரமசாலியாகிய அவனோ ஒரு குஷ்டரோகி. சீரியாவிற்கு இவன் மூலம் இரட்சிப்பு கிடைத்தது. ஆனால் இவனுக்கோ இரட்சிப்பு இல்லை. பல்வேறு வைத்தியர்களின் மருத்துவ முயற்சியால் தோல்வி அடைந்த நாகமான், சீரியா ராஜாவிடம் அனுமதி கடிதம் பெற்று காணிக்கைகளுடன் இஸ்ரவேல் நாட்டிற்கு எலிசா தீர்க்கதரிசியிடம் சென்றான். தீர்க்கதரிசி மூலமாக நாகமானுக்கு சொல்லப்பட்டது என்னவென்றால், “யோர்தானில் 7 முறை மூழ்க வேண்டும்” என்பதே. தான் நினைத்தது போல எலிசா தீர்க்கதரிசி தன்னிடம் நடந்து சொல்லாததால், அதைக் குறித்து மிகுந்த கோபம் கொண்டான்.

“மூழ்குதல்” என்பது மனந்திரும்புதலின் ஞானஸ்நானத்திற்கு அடையாளம் ஆகும். தண்ணீர் நம்மை சுத்திகரிக்கும். மனம் வருந்துதல் மட்டுமல்ல; தேவன் பக்கம் திரும்புதல் வேண்டும். கீழ்ப்படியாமை பெரிய ஆசீர்வாதமாகிய வாழ்வியல் மாற்றத்திற்கு மிகப்பெரிய தடையாய் நிற்கக்கூடும். கீழ்ப்படிந்து மனந்திரும்பி சுகம்பெற்ற நாகமான் கர்த்தடைய மகத்துவத்தை அனுபவித்தவன். கர்த்தருடைய நாமத்தை அறிவிக்கத் தொடங்கினார் (2இராஜா.5:17). நாகமானைப் போல அதிகாரத்தில் இருக்கும் வாலிபர்களும் கர்த்தர் உங்களை வைத்திருக்கும் ஸ்தானத்தில் கர்த்தருக்காக ஊழியத்தை செய்ய வேண்டும்.

**4. பெயர் குறிப்பிடப்படாத நாகமானின் வேலைக்காரன்**

நாகமானின் படையில் உள்ள பல வீரர்களில் ஒருவன். எஜமானுக்கு பிரியமானவன், தன் எஜமானின் கோபத்தை அதிகரிக்க செய்பவன் அல்ல; சாந்தப்படுத்தக்கூடியவன். நாகமான் செய்ய வேண்டியதை அவனுக்கு மிக கரிசனையோடு எடுத்துக்கூறி அவனை சம்மதிக்கப்பண்ணியவன், ஞானமுள்ள அன்பான வார்த்தைகளோடு நாகமானின் வாழ்வில் திருப்பு முனையை ஏற்படுத்தியவன். இவன் இல்லாவிட்டால் ஒருவேளை தேவனின் அற்புதத்தை பெறாமலே சென்றிருப்பார் நாகமான்.

அன்பான வாலிபர்களே, நீங்கள் பிறருக்கு உதவியாளராக இருக்கலாம், தேவன் உங்களை ஏற்படுத்திய நிலையில் உங்கள் மூலமாக பிறர் ஆசீர்வதிக்கப்பட காரணமாக இருந்து கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்.

**5. கேயாசி-எலிசாவின் வேலைக்காரன்**

கேயாசி தேவனுடைய ஊழியத்தில் பங்குபெற்றாலும் பொய் பேசுகிறவனாகவும், பண ஆசை உள்ளவனாகவும் வாழ்ந்தான். தன் எஜமானாகிய எலிசாவிடமிருந்து கற்றுக்கொள்ள மனதில்லாதவன் (வச.26). தேவனுடைய ஊழியத்தில் அர்ப்பணிப்பு இல்லாதவனாய், ஊழிய வரங்களை வாஞ்சியாதவனாய் இருந்திருக்கிறான். தான் வாழ்ந்த காலத்தில் தேவனுடைய செயலைக் குறித்து ஜாக்கிரதையில்லாதவனாய் தன் வாழ்க்கையை கெடுத்துவிட்டான்.

நாகமானின் குஷ்டரோகத்தில் ஆரம்பிக்கும் 2இராஜா.5-ம் அதிகாரம் கேயாசியின் குஷ்டரோகத்தில் முடிவது நமக்கு ஓர் எச்சரிப்பாக இருக்கிறது.

தேவையும் சவாலும் நிறைந்த இந்த வாலிப சமுதாயத்தில் தேவ இராஜ்யத்தின் பணியை அவருடைய பெலத்தின்படியே தேவன் ஏற்படுத்தியுள்ள ஸ்தானத்தில் இருந்து நிறைவேற்றியவர்கள் நமக்கு முன் உதாரணமாக இருக்கிறார்கள். புதிய ஆண்டில் புதிய தீர்மானத்தோடு அர்ப்பணிப்போடு செயல்பட்டு தேவ நாமத்தை மகிமைப்படுத்துங்கள். ஆமென்.



சிறுவர் பகுதி

# தெரிஞ்சுக்கோ புரிஞ்சுக்கோ


## பாஸ்டர். பெவிஸ்டன்

பூரண கிருபை ஏ.ஜி சபை, கருப்பாயூரணி, மதுரை-20
Contributing Editor, Paripoorana Jeevan


ஹாய் குட்டீஸ், எல்லாரும் எப்படியிருக்கிறீங்க? இவ்விதழ் வாயிலாக ஒரு சிறுகதையுடன் உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். வாருங்கள் இணைந்து பயணிப்போம்.

ஒருவன் ஒரு சிறு மெழுகுவர்த்திக்கு ஒளியேற்றி அதனை எடுத்துக்கொண்டு உயர்ந்த படிக்கட்டுகளில் ஏறத் தொடங்கினான். அப்பொழுது மெழுகுவர்த்தி அம்மனிதனைப் பார்த்து, 'என்னை எங்கு கொண்டு செல்கிறாய்?' என்று கேட்டது. அதற்கு அந்த மனிதன் 'உன்னை நான் கலங்கரை விளக்கத்தின் மேல் எடுத்துச் செல்கிறேன். நீ கப்பல்களுக்கு எல்லாம் வழிகாட்டப் போகிறாய்' என்றான்.

அதற்கு மெழுகுவர்த்தி, 'நானோ சிறு வெளிச்சம். நான் எப்படி கப்பல்களுக்கு வழிகாட்ட முடியும்?' என்று கேட்டது.

அப்போது அவன், 'நீ உன்னால் முடிந்த மட்டும் வெளிச்சத்தை கொடு. மற்றதை நான் பார்த்துக் கொள்கிறேன்' என்றான்.

அவன் அந்த மெழுகுவர்த்தியை மேலே கொண்டு சென்று அங்கிருந்த ஒரு ராட்சச விளக்கின் தீபத்தை ஏற்றினான். அப்பொழுது அது மிகப்பெரிய வெளிச்சமாகியது. அருகிலிருந்த ஒரு கண்ணாடி, அந்த வெளிச்சத்தை கடலில் பாய்ச்சியது. அதன்மூலம் கப்பல்களுக்கு வழிகாட்டப்பட்டது. சவால் நிறைந்த கடல் பயணம் மிக அற்புதமாக அமைந்தது.

அன்பு சிறுவர் சிறுமியரே, நீங்களும் கூட ஒரு விளக்கு தான். நான் ஒரு சிறுபிள்ளை என்னால் என்ன பிரயோஜனம் என நினைத்துவிடாதிருங்கள். சிறிய குச்சி கூட பல் குத்த உதவும் என்பார்கள். நம்முடைய ஞானம், திறமை, அறிவு போன்றவை சிறியதாக இருந்தாலும் நமக்குள் இருக்கும் தேவன் பெரியவர் அல்லவா? ஆகவே சுய விருப்பு வெறுப்புகளையெல்லாம் ஓரங்கட்டிவிட்டு, உங்கள் அழகான குட்டி இதயத்தினை தேவனுடைய கரத்தில் சிரித்த முகத்துடன் முழுமனதாய் கொடுத்துவிடுங்கள். அப்புறம் என்ன? **நீங்க தான் அந்த லைட் ஹவுஸ்**. அவர் உங்களை தமது விருப்பப்படியெல்லாம் நினைத்து உலகிற்கு ஆசீர்வாதமாய் மாற்றுவார்.

"நீங்கள் உலகத்திற்கு வெளிச்சமாய் இருக்கிறீர்கள்; மலையின்மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்கமாட்டாது. விளக்கை கொளுத்தி மரக்காலால் மூடி வைக்காமல், விளக்குத் தண்டின் மேல் வைப்பார்கள். அப்பொழுது அது வீட்டிலுள்ள யாவருக்கும் வெளிச்சம் கொடுக்கும்" (மத் 5:14,15).

இந்த மாத சிறுவர் பகுதி உங்களோடு நிச்சயம் பேசியிருக்கும் என நம்புகிறேன். உங்கள் தீர்மானங்களை, சாட்சிகளை 97503 81784 என்ற எண்ணிற்கு குறுஞ்செய்தியாக அனுப்புங்கள். அடுத்த இதழில் மற்றொரு சுவாரசியமான கதையோடு உங்களை சந்திக்க வருகிறேன். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.. டாட்டா..

# கடவுள் மனிதனாக பிறந்தது ஏன்?

உலக சரித்திரத்தைக் கிறிஸ்துவுக்கு முன் என்றும் (கி.மு) கிறிஸ்துவுக்குப் பின் என்றும் (கி.பி) பிரித்த சரித்திர நாயகனாகிய இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இயேசுவின் பிறப்பை ஒவ்வொரு ஆண்டும் உலகெங்கும் பல கோடி மக்கள் கொண்டாடுகின்றனர். 2022 ஆண்டுகளுக்கு முன் இவ்வுலகில் கடவுள் மனிதனக "இயேசு" என்ற பெயருடன் பிறந்த நோக்கம் என்ன? என்பதைச் சற்று தியானிப்பது நமக்கு ஆசீர்வாதத்தைக் கொண்டு வரும். மூன்று முக்கிய நோக்கங்களை உங்கள் முன் வைக்க விரும்புகிறேன்.



## 1. கடவுளை வெளிப்படுத்த (To REVEAL God)

தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை. பிதாவின் மடியிலிருக்கிற ஒரே பேறான குமாரனாகிய இயேசுவே அவரை வெளிப்படுத்தினார் என்று வேதம் கூறுகிறது (யோவான் 1:18). கடவுளின் அன்பை, மனதுருக்கத்தை, இரக்கத்தை, வல்லமையை வெளிப்படுத்தும்படியாக இயேசு பிறந்தார். என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான் என்று இயேசு சொன்னார் (யோவான் 12:45; 14:8-9). கடவுள் மனிதனாக இவ்வுலகத்தில் "இயேசு" என்ற பெயரில் பிறந்தார். அவர் மனிதனோடு தன்னை ஈடுபடுத்திக் கொண்டு மனிதனுடைய துக்கங்களில் பங்குபெற்று மனிதனை அவனுடைய எல்லா பிரச்சனைகளிலிருந்தும் விடுவிக்கிறவராகத் தம்மை வெளிப்படுத்தினார்.

## 2. மனிதனை விடுவிக்க (To REDEEM Man)

இயேசு இவ்வுலகில் இரட்சகராக, விடுவிக்கிறவராகப் பிறந்தார். இயேசு என்ற பெயருக்கு அர்த்தம் இரட்சகர் என்பது (மத்தேயு 1:21). இயேசு நம்மை கீழ்கண்ட காரியங்களிலிருந்து விடுவிக்க பிறந்தார்.

**பாவம் :** பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் (1தீமோ.1:15). பாவம் இல்லாமல் பிறந்த இயேசு நம்மை சகலவித பாவத்திலிருந்து விடுவிக்கிறார் (மத்தேயு 1:21). நம்முடைய பாவங்களை சுமந்து தீர்க்கவே இயேசு மனிதனாக வெளிப்பட்டார் என்று வேதம் கூறுகிறது (1 யோவான் 3:5; எபிரெயர் 9:26). இயேசு சிலுவையில் சிந்தின இரத்தம் நம்முடைய ஜென்ம பாவங்கள், கரும பாவங்கள் அனைத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கிறது (1 யோவான் 1:7). உலகத்தில் பிறக்கிற அனைவரும் பாவத்தில் தான் பிறக்கிறோம் (சங்.53:5). பாவத்தின் சம்பளம் மரணம் (ரோமர் 6:23). ஆனால் இயேசு நமக்குப் பாவத்திலிருந்து விடுதலையும் நித்திய வாழ்வையும் அளிக்கிறார்.

**சாபம் :** பலவிதமான சாபங்களின் நிமித்தம் தோல்விகளையும், இழப்புகளையும், ஏமாற்றங்களையும் அடைந்து வரும் மக்களின் சாபங்களை நீக்கி விடுவிக்க இயேசு உலகத்தில் வந்தார். இயேசு மனுகுலத்தின் அனைத்து சாபங்களையும் தன்மேல் சிலுவையில் ஏற்றுக் கொண்டபடியால் மனிதர்களின் சாபங்களை நீக்கி அவர்களை ஆசீர்வதிக்கிறார் (கலா. 3:13).

**வியாதி :** இயேசு நம்மை வியாதிகளிலிருந்து விடுவித்து நமக்குச் சுகவாழ்வு தரும்படியாக இவ்வுலகத்திற்கு வந்தார். அவர் தாமே நம்முடைய பலவீனங்களை ஏற்றுக்கொண்டு நம்முடைய நோய்களைச் சுமந்தார் (மத்தேயு 8:17). அவருடைய

தழும்புகளால் சுகமாகிறோம் (ஏசாயா 53:5) என்று பைபிள் கூறுகிறது. சகலவித நோய்களையும் தீராத வியாதிகளையும் சுகமாக்க இயேசு வல்லவர்.

**பயம் :** இயேசு நம்மை பயத்திலிருந்து விடுவிக்கிறார். ஜீவ காலமெல்லாம் மரண பயத்தினாலே பிடிக்கப்பட்டுள்ள யாவரையும் விடுதலைபண்ண இயேசு பிறந்தார் என்று வேதம் கூறுகிறது (எபி.2:13). இயேசு பிறந்த பொழுது தூதர்கள் பலமுறை “பயப்படாதிருங்கள்” என்ற நற்செய்தியை ஜனங்களுக்கு அறிவித்தார்கள் (லூக்கா 1:13,30;2:10; மத்தேயு1:20,24). பயம் ஒரு கொடுமையான உணர்ச்சி. எதிர்காலத்தைக் குறித்த பயம், மரண பயம், தோல்வி பயம் என்று பலவித பயங்கள் இன்று மனிதனை வாட்டுகின்றன. ஆனால் இயேசு இவையெல்லாவற்றிலிருந்தும் நம்மை விடுவிக்கிறார்.

## 3. பிசாசின் கிரியைகளை அழிக்க (To RUIN the works of Satan)

பிசாசின் கிரியைகளை அழிக்கும்படிக்கே மனுஷகுமாரன் வெளிப்பட்டார் என்று வேதம் கூறுகிறது (1 யோவான் 3:8). பிசாசு திருடவும், கொல்லவும், அழிக்கவும் வருகிறான். ஆனால் நானோ உங்களுக்கு ஜீவன் கொடுக்கவும் அது பரிபூரணப்படவும் வந்தேன் (யோவான் 10:10) என்று இயேசு கூறினார். பிசாசின் வல்லமையில் அகப்பட்ட பலரை இயேசு விடுவித்தார் (அப்.10:35). இறுதியில் சிலுவையில் பிசாசை ஜெயித்து, அவன் கிரியைகளை அழித்தார். துரைத்தனங்களையும், அதிகாரங்களையும் உரிந்துகொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவையிலே வெற்றி சிறந்தார் (கொலோ.2:15). இயேசுவை ஏற்றுக்கொண்டு வசனத்தின்படி வாழும் ஒவ்வொருவருக்கும் பிசாசின்மேல் ஜெயத்தை தேவன் தருகிறார் (1 யோவான் 2:14). பொல்லாங்கனாகிய பிசாசு நம்மை தொடமுடியாது (1 யோவான் 5 : 18). அல்லேலூயா!.

### இயேசுவுக்கு உங்கள் வாழ்க்கையில் இடம் கொடுங்கள்

உலக இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவுக்கு தங்கள் இருதயத்தில் யாரெல்லாம் இடம் கொடுக்கிறார்களோ அவர்களெல்லாம் தேவனுடைய பிள்ளைகளாகிறார்கள் என்று வேதம் கூறுகிறது (யோவான் 1: 12). இயேசு இன்றும் உங்கள் இதயக் கதவைத் தட்டிக் கொண்டிருக்கிறார் (வெளி.3:20). அவருக்கு உங்கள் வாழ்க்கையை ஒப்புக் கொடுக்கும்பொழுது உங்கள் உள்ளத்தில் அவர் வருவார். விடுதலையும் சமாதானமும் அளிப்பார். இன்று உங்கள் உள்ளத்தில் இயேசுவுக்கு இடம் உண்டா?

– ஆசிரியர்





# ஆலோசனை-COUNSEL

Rev.K. ராஜா

இயக்குநர், கிறிஸ்துவுக்கு மாணவர் ஊழியம்

## I. ஆலோசனை என்றால் என்ன?

பிரச்சனைக்கு தீர்வு காணும் பொருட்டு ஆலோசகரிடம் வரும் நபருக்கு அப்பிரச்சனையை தீர்ப்பதற்கான அணுகுமுறையை சொல்லிக் கொடுத்து அப்பிரச்சனையிலிருந்து வெளியே வர வழி காட்டுவது ஆலோசனையாகும்.

## II. யாருக்கு ஆலோசனை?

- குழப்பத்தில் இருப்பவர்களுக்கு.
- தீர்மானம் எடுக்க முடியாமல் இருக்கிறவர்களுக்கு.
- வழிகாட்டுதல் தேவைப்படுபவர்களுக்கு.

## III. ஆலோசனை நமக்கு வாக்குத்தத்தம்

சங்கீதம் 32:8 நான் உனக்கு போதித்து, நீ நடக்க வேண்டிய வழியை உனக்கு காட்டுவேன்; உன்மேல் என் கண்ணை வைத்து உனக்கு ஆலோசனை சொல்லுவேன்.

ஆசீர்வாத வாக்குத்தத்தத்தை எப்படி ஆவலோடு ஏற்றுக்கொண்டு, விசுவாசிக்கிறோமோ, அதுபோல தேவ நடத்துதலுக்கான ஆலோசனை வாக்குத்தத்தத்தையும் ஆவலோடு ஏற்றுக்கொண்டு, விசுவாசிப்பது இன்னும் நமக்கு ஆசீர்வாதமாக இருக்கும்.

## IV. ஏன் ஆலோசனை ?

நம்முடைய வாழ்க்கையில் ஆலோசனை அவசியம். காரணம்,

- நீதி. 11:14 - ஆலோசனை இல்லாத இடத்தில் விழுந்து போவார்கள்.
- நீதி.15:22-ஆலோசனை இல்லாமையால் எண்ணங்கள் சித்தியாமற்போம்.

## V. யாரிடம் ஆலோசனை

### A. தேவனிடம்

ஆலோசனை கொடுப்பதற்கு பலர் நம்மைச் சுற்றிலும் இருந்தாலும், தேவனுடைய பிள்ளைகளுக்கு பிரதான ஆலோசகர் ஆண்டவரே, காரணம்.

- ஏசா. 9:6 - அவர் ஆலோசனைக் கர்த்தர்.
- சங். 16:7 - அவர் ஆலோசனை தருகிறவர்.
- நீதி. 21:30 - அவருக்கு விரோதமான ஆலோசனை இல்லை.

### B. தேவன் ஏற்படுத்தியிருக்கிற ஆலோசகர்களிடம்

நம்மை சுற்றியிருக்கிற எல்லா மனிதர்களிடமும் இருந்து வருகிற வார்த்தைகளெல்லாம் நமக்கு நல்ல ஆலோசனையாக இருக்க வாய்ப்பில்லை. நம்மேல் அக்கறையுள்ள, நமக்கு உத்தரவாதம் கொடுக்கிற சிலரை தேவன் வைத்திருக்கிறார். அவர்கள் நம்முடைய வாழ்க்கையில் முக்கியமானவர்கள்.

- நீதி. 4:1 - தகப்பனின் போதகத்தைக் கேள்.
- நீதி. 1:8 6:20 - தாயின் போதகத்தை தள்ளாதே.

- நீதி. 5:12-14 - போதகரின் சொல்லைக் கேள்.

## VI. ஆலோசனையின் ஆசீர்வாதங்கள்

- சங்.33:10,11 - தேவ ஆலோசனை நித்திய காலமாக நிற்கும்.
- சங்.139:17 - தேவ ஆலோசனை அருமையானதாக இருக்கும்.
- சங்.73:24-தேவ ஆலோசனை முடிவில் மகிமையில் கொண்டுபோய் விடும்.
- நீதி. 11:14 - அநேக ஆலோசனைக்காரர் உண்டானால் சுகம் உண்டாகும்.
- நீதி. 24:6 - ஆலோசனைக்காரர் அநேகரால் ஜெயங்கிடைக்கும்.

## VII. பிரச்சனையும் ஆலோசனையும் : II ராஜா 3:1 – 18

இந்த வேத பகுதியில் இஸ்ரவேலின் ராஜா, யூதாவின் ராஜா, ஏதோமின் ராஜா மூன்று பேரும் ஒரே பிரச்சனையை சந்திக்கிறார்கள். தாங்கள் சந்தித்த ஒரே பிரச்சனையை ஒவ்வொருவரும் அணுகின விதத்தையும், அதன் விளைவுகளையும் பார்க்கலாம்.

- **நடப்பதை வேடிக்கை பார்ப்பது** : (ஏதோமின் ராஜா)

ஏதோமின் ராஜா எதுவும் பேசவில்லை, நடப்பதை வேடிக்கை பார்ப்பதும், என்ன நடந்தாலும் அதை ஏற்றுக்கொள்வது என்று அணுகுமுறை. எதுவும் நடக்கவில்லை.

- **எதையும் எதிர்மறையாக பார்ப்பது, யோசிப்பது, பேசுவது : (இஸ்ரவேலின் ராஜா)**

II ராஜா.3:10-ல் பிரச்சனையைக் கண்டு பயந்து எதிர்மறையாக பார்ப்பது, யோசிப்பது, பேசுவதுமான அணுகுமுறை. எதுவும் நடக்கவில்லை.

- **ஆலோசனையைத் தேடுவது** : (யூதாவின் ராஜா)

யூதாவின் ராஜாவாகிய யோசபாத் சவாலான பிரச்சனையை சந்தித்தபோது தேவ மனிதனிடம் விசாரிக்க, ஆலோசனை பெற முயற்சித்து (IIராஜா.3:11) பிரச்சனையிலிருந்து வெளியே வருவதற்கான வழிமுறைகளைப் பெற்று (II ராஜா.3:16,17) வெற்றி காணும் அணுகுமுறை. பிரச்சனையிலிருந்து வெளியே வந்தார்கள்.

நீங்கள் மாணவ, மாணவிகளாக இருந்தாலும், இல்லாவிட்டாலும், சந்திக்கிற ஒவ்வொரு பிரச்சனையிலிருந்தும், சவால்களிலிருந்தும் வெளியே வந்து வெற்றி பெற தேவனிடமும், தேவனால் ஏற்படுத்தப்பட்ட ஆலோசகர்களிடமும் ஆலோசனை பெற்று, செயல்பட்டு, வெற்றி பெற தவறாதீர்கள்.

## VIII. ஆலோசனை பெற

- தேவ ஆலோசனை அடங்கிய வேதாகமத்தை தொடர்ந்து வாசியுங்கள் (சங்.119 :105).
- தேவ சமூகத்தில் அமர்ந்து ஜெபிக்கத் தவறாதீர்கள் (சங். 143:10).
- தேவனால் ஏற்படுத்தப்பட்டிருக்கிற நல்ல ஆலோசனைக்காரர்களை எப்போதும் உங்களைச் சுற்றி வைத்துக்கொள்ளுங்கள். அவர்களை விட்டுவிடாதீர்கள் (நீதி. 11:14 ).
- நல்ல ஆலோசனை புத்தகங்களை வாசியுங்கள்.

தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக



# தலையெழுத்து-விதி (Destiny)


**Rev. பெகின் சாமுவேல்**

இயக்குநர், தமிழ் பிரதேச சிறுவர் ஊழியங்கள்


ஆண்டவரும் அருமை இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இந்த பரிபூரண ஜீவன் இதழ் மூலமாக உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. கர்த்தர் நம்முடைய AGCM ஊழியங்களை அதிகமாக ஆசீர்வதித்து வருகிறார். சில ஞாயிறு பள்ளி ஆசிரியர் கையேடுகளும், மாணவ பயிற்சி புத்தகங்களும் அச்சிடும் பணிகள் துரிதமாக நடைபெற பிரயாசப்படுகிறோம். இதற்காக தொடர்ந்து ஜெபித்துக்கொள்ளுங்கள். வரும் நவம்பர் மாதம் நடைபெற இருக்கிற பைபிள் சாம்பியன்ஸ் வேதாகமத் தேர்விற்காக பிள்ளைகளை ஆயத்தப்படுத்துங்கள். ஆசிரியர்களும் ஆயத்தமாகுங்கள்.

நாம் அநேகர் சொல்ல கேள்விப்பட்டிருக்கும் காரியம் 'எல்லாம் என்னுடைய தலையெழுத்து'. 'என் தலையெழுத்து சரியில்லை, என் தலையெழுத்து அவ்வளவுதான்' என்பதாக. வேதத்தில் 'தலையெழுத்து' என்ற வார்த்தையை நாம் பார்க்க இயலாது. ஆண்டவருடைய பிள்ளைகளாகிய நாம் தலையெழுத்தில் நம்பிக்கை வைப்பவர்கள் அல்ல.நாம் தேவனுடைய வார்த்தையின் மேல் நம்பிக்கை வைப்பவர்கள். என் காலங்கள் உமது கரத்திலிருக்கிறது என்று சங்கீதக்காரனாகிய தாவீது சொல்லுவதாக சங்.31.5-ல் வாசிக்கிறோம். வேதம் எதிர்காலத்தைக் குறித்து அதிகமாக பேசுகிறது. எதிர்காலத்தில் நடக்கப்போகிற காரியங்களுக்கு வேதம் முக்கியத்துவம் கொடுக்கிறதை நாம் காண முடிகிறது. இன்றும் சில பிள்ளைகளைக் குறித்து, அவர்கள் வாழ்க்கையின் சூழ்நிலைகளைப் பார்த்து "இந்தப் பிள்ளையின் தலையெழுத்து இருக்கும்போது நாம் என்ன செய்ய முடியும்" என்று கூறி அவர்கள் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கி விடுகிறார்கள். ஆனால் தேவனால் எவரையும் மேன்மைப்படுத்த முடியும், உங்கள் எதிர்காலத்தை ஆசீர்வாதமாக்க முடியும். என்னென்ன காரியங்கள் நம் வாழ்வின் எதிர்காலத்தை மாற்றி ஆசீர்வாதத்தை தர இயலும் என்பதை பார்ப்போம்.

### 1. ஜெபம் (Prayer can change your Destiny)

ஜெபத்தினால் முடியாதது எதுவுமில்லை. முழங்கால் எதையும் நம் வாழ்வில் நடப்பிக்க இயலும். வேதத்தில் யாபேஸ் என்ற ஒருவனைப் பற்றி வாசிக்கிறோம். அவனுடைய தாய் அவனை துக்கத்தில் பெற்றேன் என்று அவன் வாழ்நாள் முழுவதும் துக்கமாகத்தான் இருப்பான் என்பது போல் யாபேஸ் என்ற பெயரை இடுகிறாள். ஆனால் யாபேஸ் வளர்ந்து பெரியவனானபோது, தன்னுடைய துக்கம் நிறைந்த வாழ்வை ஜெபத்தினால் மாற்றலாம் என்று அவன் கண்டுகொண்டான். அவன் வேண்டிக்கொண்டதை தேவன் அவனுக்கு அருளினார். தன்னுடைய சகோதரரெல்லாரிலும் அவன் கனம்பெற்றவனாய் இருந்தான் என்று நாம் அவனைக் குறித்து வேதத்தில் வாசிக்கிறோம். உங்கள் வாழ்க்கையில் 'தலையெழுத்து' என்று கூறப்படும் வார்த்தையை உங்கள் ஜெபத்தினால் மாற்றி, உங்களை ஆசீர்வதித்து கனம்பெற்றவர்களாக உயர்த்த தேவன் வல்லவர்.

## 2. விசுவாச வார்த்தை (Faith confession can change your Destiny)

நமது வாயிலிருந்து வரும் விசுவாச வார்த்தைகளை தேவன் அங்கீகரிக்கிறார். யோபு தனக்குரிய எல்லாவற்றையும் இழந்து நிற்கிற நிலையிலும் அவன் வாயிலிருந்து'என் மீட்பரைப் பார்ப்பேன், என் சொந்த கண்களால் அவரைக் காணுவேன், அவர் மேல் நம்பிக்கையாயிருப்பேன்' என்ற வார்த்தைகள் வந்தன. நம் விசுவாசத் தகப்பனாகிய ஆபிரகாமும் கூட ஈசாக்கை பலியிட செல்லும்போது, 'நானும் பிள்ளையாண்டானும் மலையில் பலியிட்டு திரும்பி வருவோம்' என்ற வார்த்தையுடன் செல்கிறான். அவன் வாயின் விசுவாச அறிக்கையின்படி அவர்கள் இருவரும் திரும்பி வந்தார்கள். மனிதன் இன்று உங்களை, உங்கள் வாழ்க்கையைக் குறித்து சொல்லுகிற காரியங்களுக்கு செவியை சாய்க்காமல் தேவனுடைய வார்த்தை என்ன சொல்லுகிறது என்று ஆராய்ந்து அதை அறிக்கை செய்யுங்கள். உங்கள் வாழ்வின் எதிர்காலத்தை தேவன் ஆசீர்வதிக்க முடியும். எப்பொழுதும் உங்கள் வாயிலிருந்து நேர்மறையான, விசுவாசமான வார்த்தைகள் (Positive confessions) வரட்டும். என்னை தேவன் ஆசீர்வதிப்பார். 'நான் செழிப்பாய் இருப்பேன். நான் என் வாழ்க்கையில் ஜெயிப்பேன், சாதிப்பேன்' என்று விசுவாசத்தை அறிக்கை பண்ணுவோம். தேவன் உங்களைக் குறித்து சொன்ன வாக்குத்தத்தங்களை தினமும் உங்கள் காதுகள் கேட்க அறிக்கை பண்ணி ஜெபியுங்கள். உங்கள் வாழ்வில் மாற்றத்தைக் காண்பீர்கள்.

தலையெழுத்தை மாற்ற முடியாது என்று உலகம் சொல்லும். ஆனால் தேவனால் எதையும் மாற்ற இயலும். எனவே நம்முடைய வாழ்க்கையில் உலகத்தார் நம்மை பார்த்து என்ன சொன்னாலும், உங்கள் பிள்ளைகளைப் பார்த்து ஒன்றுக்கும் ஆகாதவர்கள் என்றாலும் பெற்றோர்களாகிய நீங்கள் உங்கள் ஜெபத்தினாலும், விசுவாச வார்த்தையினாலும் தலையெழுத்தை மாற்ற முடியும். இனி வரும் இதழ்களிலும் இந்த காரியத்தைக் குறித்து அதிகமாக தியானிப்போம். கர்த்தர்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.




# ஏ.ஜி திருச்சபைகளின்

## அடிப்படை வேதாகம உபதேசங்கள்

1. பரிசுத்த வேதாகமம் ஆவியானவரால் ஏவபட்டு எழுதப்பட்டது (2 தீமோ.3:16,17).
2. ஒரே மெய்யான தேவன் திரித்துவமாக வெளிப்பட்டுள்ளார் (உபாகமம் 6:11; மத்தேயு 28:19).
3. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தெய்வீகமானவர் (மத்தேயு 1:23).
4. மனிதன் தானாக மீறுதலுக்குட்பட்டு வீழ்ச்சியடைந்தான் (ஆதியாகமம் 1:26,27;2:17;3:6).
5. தேவ குமாரனாகிய இயேசுவின் இரத்தத்தின் மூலம் மட்டுமே மனிதன் இரட்சிக்கப்பட முடியும் (எபே.2:8; ரோமர் 10:13-15)
6. சபையின் அனுசாரங்களான முழுக்கு ஞானஸ்நானம், கர்த்தருடைய பந்தி ஆகியவை திருவசன கட்டளை (மாற்கு 16:16; ரோமர் 6:4; 1 கொரி.11:26).
7. பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் சாட்சியுள்ள ஜீவியத்திற்கும் வல்லமையான ஊழியத்திற்கும் அவசியம் (அப்.1:8)
8. பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தின் வெளிப்படையான ஆரம்ப அடையாளம் அந்நிய பாஷை (அப்.2:4).
9. பரிசுத்தமாகுதல் (ரோமர் 12:12; 1 தெச.5:23).
10. பாவத்தில் இழந்து போனவர்களை தேடி இரட்சிப்பது சபையின் அருட்பணியாகும் (மத்தேயு 28:19,20).
11. ஒவ்வொரு விசுவாசியும் கர்த்தருக்காக ஊழியம் செய்யும் ஊழியனாக செயல்பட வேண்டும். மேலும் சபையில் தலைமைத்துவ பொறுப்புகளில் ஐந்துவித வரமுள்ள ஊழியங்களைக் கர்த்தர் நியமித்துள்ளார் (எபேசியர் 4:12,13).
12. தெய்வீக சுகம்-மீட்பின் பரிகாரத்தில் வியாதியினின்று விடுதலை பெறுவதற்கான பரிகாரமும் உட்பட்டுள்ளது (ஏசாயா 53:4,5; மத்தேயு 8:17).
13. கிறிஸ்துவின் வருகையில் அவரை சந்திப்பது சபையின் ஆசீர்வாதமான நம்பிக்கையாகும் (1 தெச.4:16,17)
14. இயேசு தமது பரிசுத்தவான்களோடு திரும்ப வந்து இப்பூமியிலே 1000 வருடம் ஆட்சி செய்வார் (வெளி.20:1-6).
15. கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாதவர்களுக்கு இறுதி நியாயத்தீர்ப்பு உண்டு (வெளி.20:11-15).
16. கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்களுக்காக புதிய வானமும் புதிய பூமியும் உண்டாகும் (வெளி.21:22).

# ஒரு வேதாகமத்தின் டைரிக்குறிப்பிலிருந்து

**ஜனவரி :** அநேக வேலைகள் நிறைந்த நெருக்கமான நேரம் எனக்கு. குடும்பத்தில் பலர் என்னை இந்த வருடத்தில் வாசித்து முடிக்க முடிவு செய்து, முதல் இருவாரங்கள் என்னை உபயோகித்தனர். ஆனால் இப்போதோ என்னை முற்றிலும் மறந்துவிட்டனர்.

**பிப்ரவரி:** கடந்த வாரம் என் உரிமையாளர், சில மணித்துளிகள் என்னை உபயோகித்தார். எதற்குத் தெரியுமா? இன்னொருவரோடு அவருக்கு ஏற்பட்ட வாக்குவாதத்தில் இவருக்கு சாதகமாக சில வசனங்களைக் கண்டுபிடிக்க.

**மார்ச்:** தாத்தா, வீட்டிற்கு வந்திருக்கிறார். சுமார் ஒரு மணிநேரம் என்னைத் தன் மடிமேல் வைத்து 1 கொரிந்தியர் 13ம் அதிகாரத்தை வாசித்தார்.

**ஏப்ரல்:** இன்று என்னைப் பெட்டி ஒன்றில் போட்டு மூடிவிட்டார்கள். விடுமுறைக்காக வேறிடம் செல்கிறார்கள் போலும். வீட்டிலேயே என்னை விட்டுச்சென்றால் நலமாயிருக்கும். ஒரு மாத காலமும் பெட்டிக்குள் தானே இருக்கப்போகிறேன்.

**மே:** இன்னும் நான் பெட்டிக்குள் தான்.

**ஜுன்:** வீடு திரும்பியாகிவிட்டது. என் இடத்தில் அமர்ந்திருக்கிறேன். தற்போது என்னோடு சிலர் சேர்க்கப்பட்டுள்ளனர். யார் தெரியுமா? மூன்று கதைப்புத்தகங்களும் நான்கு நகைச்சுவை ஏடுகளும் என்மேல் ஏறி உட்கார்ந்துள்ளனர்.

**ஜுலை:** இம்மாதத்தில் ஒரே ஒருநாள் மட்டும் நான் அதிகமாய் உபயோகிக்கப்பட்டேன். காரணம் என் உரிமையாளர் ஏதோ ஓரிடத்தில் தலைவராய் தேர்ந்தெடுக்கப்பட்டதால்!!

**ஆகஸ்ட்:** என் பக்கங்களில் சில பச்சை நிற சாயம் படிந்துள்ளது. அழகிய பூக்கள் என் பக்கங்களுக்கிடையில் வைத்து பராமரிக்கப்பட்டதன் விளைவு.

**செப்டம்பர்:** துண்டுப் பேப்பர்களை செருகிவைக்கும் ஒரு குப்பைப் புத்தகமாக நான் காட்சியளிக்கிறேன். அநேக செய்தித் தாள்களின் பகுதிகள் எனக்குள் அடைக்கப்பட்டுள்ளது.

**அக்டோபர்:** குடும்பத்தில் ஒருவர் மிகவும் வியாதிப்பட்டிருப்பதால் இன்று என்னைச் சிறிது உபயோகித்தார்கள். நன்றாக துடைக்கப்பட்டு மேஜையின் நடுவில் வைக்கப்பட்டுள்ளேன்.

**நவம்பர்:** யாரும் வியாதிப்படாததால், என் பழைய இடத்திற்கே போய்விட்டேன்.

**டிசம்பர்:** கிறிஸ்மஸ்க்காக ஆயத்தப்படுகிறார்கள். நிச்சயம் வண்ணப் பேப்பர்களுக்கடியில் தான் என் இடம். இவ்வருடம் அவ்வளவாய் நான் உபயோகிக்கப்படவில்லை.

**உங்கள் வேதாகமத்தின் நிலை எப்படி?**

நீ உன் தேவனுடைய வேதத்தை மறந்தாய், ஆகையால்
நானும் உன்பிள்ளைகளை மறந்துவிடுவேன். (ஓசியா 4:6)

# கர்த்தரை நோக்கிக் கூப்பிடு!



(சங்கீத புத்தகத்திலிருந்து)

**கர்த்தரை நோக்கிக் கூப்பிடு; அவர் உன்னை**

1. வெட்கப்படவிடமாட்டார் (22:5;31:17).
2. குணமாக்குவார் (30:2).
3. விடுவிப்பார் (107:6,13,28).
4. விசாலத்தில் வைப்பார் (118:5; 4:1).
5. உனக்காக யாவற்றையும் செய்து முடிப்பார் (57:2;138:8).
6. கிருபை அளிப்பார் (86:5).
7. ஆத்துமாவில் பெலன் தந்து தைரியப்படுத்துவார் (138:3).
8. சத்துருக்கள் பின்னிட்டு திரும்ப செய்வார் (56:9;18:3).
9. சமீபமாயிருப்பார் (145:18)
10. கனப்படுத்துவார் (91:15).

**எப்படி கூப்பிட வேண்டும்?**

- உண்மையாய் (145:18)
- முழு இருதயத்தோடு (119:145)
- நாள்தோறும் (86:3; 88:9)
- இரவும் பகலும் (88:1)

## போட்டி எண் : 95 (சரியான விடைகள்)

1).2கொரி.10:18;|2).2கொரி.4:18;|3).2கொரி.13:11;|4).2கொரி.5:6 ;|5).2கொரி.6:14;|6).2கொரி.2:11;|7).2கொரி.9:9;|8).2கொரி.4:4;|9).2கொரி.10:4;|10).2கொரி.4:8;|11).2கொரி.8:21;|12).2கொரி.2:15;|13).2கொரி.5:17;|14).2கொரி.7:10;|15).2கொரி.3:17;|16).2கொரி.9:7;|17).2 கொரி.1:10; |18).2 கொரி.9:15; |19).2 கொரி.5:21; |20). 2 கொரி.1:13.

## போட்டி எண் : 95 (சரியான விடை எழுதியவர்கள்)

**செங்கோட்டை**: V.பியூலா; பூங்கோதை; சாராள் (வே.பு); விஜி; மயில்; மகேஷ்வரி; J.சுமதி;கோகிலா; S.முத்துலெட்சுமி; M.எஸ்தர் (அச்.பு); ராதாமணி; கனகவல்லி; ஜெயா சுவாமிநாதன்; பிரேமலதா; மாது; ஸ்ரீமதி; பிரியா; T.கலா; சித்ரா பிளஸ்சி; ஏஞ்சல் அனு பிரின்ஸி;குளோரி; அமுதாகிட்டு; பேபிகலா; சோனியா; இந்திரா; M.சுமதி; ஹெப்சி அன்பு; கிறிஸ்டி; ராணி பிளஸிங்; ஜெயசிலின்; எஸ்தர் கலா; செல்வி; K.முத்துலெட்சுமி; M.எஸ்தர்; ரோஸ்லின்; மாலா; மரகதம்; E.கலா;|**KTC நகர்**: ரத்னா; பிரேமா ரூத்; சில்வியா; சிவகாமி சாராள்;|**கடையநல்லூர்**:சுகன்யா; ஸ்டெல்லா; தங்கராஜ்; சாமுவேல்; விக்டோரியா; கண்ணன் செல்வி; ரமணி; தமிழ் சோனியா;|**புளியங்குடி**:ஜெபஞானம்; எஸ்தர் ராணி; செல்வராணி; ஜெயமணி; |**ஸ்ரீவில்லிபுத்தூர்** : நேசன் செல்வராஜ்; ஜெயராணி; எஸ்தர் இந்திரா; மெசி; தேவபிரியா;கிறிஸ்டி பிரியா; லீதியாள் காபிரியேல்; பிரிதா; அனிதா; நித்யா; குளோரி; காபிரியேல்;|**திருநின்றவூர்**: ஹேமலதா; மகேஷ்; அனுலா; லீலாபரணி; சகுந்தலா பாண்டியன்; சர்மிலி; ரோஸ்லின் மேரி; அனிதா; நாகஜோதி; ஜெயராஜ்; புவனேஷ்வரி; வின்சி; மாலதி; ஏடா டாரியா;|**அச்சிறுப்பாக்கம்** : சிவகாமி; சுதா சார்லின்; திரேசா; அன்னப்பூரணி; அபிக்காயில்; கிருத்திகா; ராய்ஸ்டன் க்ளென்;|**தேனி**: தனம்; அன்புகனி;

## போட்டி எண் : 95 (சரியான விடை எழுதியவர்கள்)....

பூமணி ஜான்ஸி; திரவியச் செல்வி; கார்த்திகேயாயினி; கிருபா; ஜோதிமணி ; | **மதுராந்தகம்** : ரோஸ் பாண்டியன்; சாந்தி; நேசம்; கிரேஸ் பியூலா;|**இறச்சகுளம்**: எஸ்தர்; ஜெஸ்மின்; ஷாலினி; கலா; கனகமணி; ஷோபா; நளினிஷாலினி; ராதிகா;|**ஆறுமுகநேரி** : அன்சி ரத்னம்; பனிமலர்; பிரேமாகணேசன்; ஜோதிமீனா; செல்வபிரியா;|**நாகர்கோவில்**: இவாஞ்சலின்; ராபிலின் ஜெரினா; அஜி ஸ்டெல்லா; ஏஞ்சல் குமார்; மரியநேசம்;|**புலியூர்** : தேவஜோதி; பவித்ரா ஏஞ்சல்; கிரேஸ் பெர்சியாள்; அபிகாயல்; சாராள் பானு; பாலினா ஜெர்லின் ஜாய்ஸ்;|**எடப்பாடி** : பிரியா; ரூத்; சுதா; புஷ்பா; ஜோசப் மேரி;|**தேவகோட்டை** : மேரி ராபின்; **கீழபஞ்சப்பூர்** : ஜஸ்டஸ் டேனியல்;|**நாச்சிக்குறிச்சி**: சகாய டெய்ஸி; **களக்காடு** : ஜெய மெர்சி; **பத்தை**: விமலாபாய்;|**வல்லநாடு** : பூமணி;|**குற்றாலம்** : ரூத்;|**பன்ருட்டி** : எஸ்தர் ராஜம்மாள்;| **மூக்குப்பேரி**: செல்லத்தாய் ராணி; சுசிலா;|**ஆண்டாள்புரம்**: கனகவல்லி; **நாகமலை**: விஜிலா;| **பழங்காநத்தம்**: ஞானம் ஜான்;|**மதுரை**: ரூபி ஜெகதா;|**கல்லல்**: அபிஷாக்; தேவநேசம்;|**நாசரேத்**; மெர்சி; தாசன் மோசஸ்; எஸ்தர் ; |**தூத்துக்குடி**: சத்யா எட்வின்; சில்வெஸ்டர்; புருசிமா; கீர்த்தனா (புதூர்);|**பிச்சிவிலை**: நிசி;|**ஓசூர்** :ஜெமிந்தா; பரிமளா;|**ஆலங்குளம் (வி)**: ரெஜினா சாரு; பிளாரன்ஸ்; |**சுரண்டை**: குளோரி ஞானம்;|**தச்சூர்** : ஆன்று; பார்கவி; கவிதா;| **பெருங்குளம்** ; பவித்ரா; பியூலா ஜோபாய்;| **விலாத்திக்குளம்**:சண்முகப்பிரியா; |**நாகலாபுரம்**:சாராள்;|**அகஸ்தியர்பட்டி**: நிர்மலா;|**வில்லுக்குறி**: கிருஷ்ணகுமாரி; லதாமேரி;| **குலசேகரமங்களம்**:ஏஞ்சல்; |**மம்சாபுரம்** : சத்யாப்பிரியா; ஹெப்சிபா;| **பாவூர்சத்திரம்**:ஜெமிலி;| **கடலையூர்**:ஹேமா;| **சென்னை**: அருள்மேரி;| **குளத்தூர்** : மோனிகா;| **அண்ணாநகர்**: சுரேந்திரபோஸ்; வசந்தி டேவிட்;| **வலசரவாக்கம்**: நிர்மலா எஸ்தர்;| **சித்தாளப்பாக்கம்**:ரேணுகா;| **கொட்டிவாக்கம்**:எஸ்தர் விஜயராணி; அஞ்சலி; அமுதவல்லி;|**மேடவாக்கம்** : ஜமுனா;| **மதுரவாயல்**: ஜெனிதா சசி;|**அரும்பாக்கம்**: சற்குணம்; மேரி;| **குரோம்பேட்டை**:கோமதி குமார்;|**மூலைக்கரைப்பட்டி** : ஜெபநேசர் மோசஸ்;|**பரமத்தி வேலூர்** : பாமா;| **பசுவந்தனை**:தங்கமாரி; கிருபா ஜெப்ரி;|**ஆம்பூர்** : கிரிஜா சத்யா;|**கூத்தாநல்லூர்**: கிளமாண்டின்; பாஸ்டியன்;|**கடாட்சபுரம்**:சுசிலா;ரேவதி கில்பர்ட்;| **காங்கேயம்**:ராஜாமணி;|**வெளிப்பாளையம்**: ரத்தினமணி;| **காயல்பட்டிணம்**: அன்னவடிவு;| **கிச்சிப்பாளையம்**:அந்தோணியம்மாள்;விஜய்; சாரோன் ஜெயரூபி; கிறிஸ்டல் ஜான்;|**பரமக்குடி**: பிரியா;|**காஞ்சிகோவில்**: கீர்த்தனா;| **உடுமலைப்பேட்டை** : ஏஞ்சல்மார்டின்;|**ஆத்தூர்** : பியூலா; பாக்கியலெட்சுமி;|**பாபநாசம்** : வளர்மதி ;| **கொல்லம்பட்டி**: மேரிராஜாமாணிக்கம்;|**தஞ்சாவூர்**: தேவகுமார்; மெர்சி ஜெயசீலன்;|**பள்ளிக்கரணை**: பொன்செல்வி;|**கும்பகோணம்**:சாந்தகுமார் சிவரசி;|**சாத்தூர்** :சங்கீதா;|**பெரியகுப்பம்**: லில்லி யோவான்; **பவானி**: ரேச்சல் மனாசே;|**புதுச்சேரி**: ஷீபா எப்பாபார்சன்;|**பாளையங்கோட்டை**: கிருபாராஜன்;|**வில்லியனூர்**:தீபா; நளினி ஜெபராஜ்;புரோனிக்கா;|**டோனாவூர்**:அல்போன்ஸ்;| **ஆண்டிபட்டி**: மேரி; சலோமி; பூங்கொடி;| **நெல்வாய்**: வெஸ்லி விஜயகுமார்; இன்ப கனி;| **திருப்பத்தூர்**: ரூபி மனோகரன்;|**விருதுநகர்**: நிம்மி;|**பாஞ்சாலங்குறிச்சி**;புஷ்பராணி;|**ஆழ்வார்குறிச்சி**: ஹரிலீலா ;| **தாழையூத்து**:மெர்சி; சிவகாமி;|**கள்ளக்குறிச்சி**:செல்வராஜ்;தங்கமணி;| **கோயம்புத்தூர்** : குளோரிபால்; கிறிஸ்டினா அபிக்காயில்;|**பெருமாள்புரம்**: சந்திரா ஆல்பர்ட்;|**பெரியகுளம்** : மனோ காசிராஜ்;|**திருச்செந்தூர்**:தேவதாஸ்;|**உல்லகரம்**:மெர்லின் D.ஹெலன்;|**குனியமுத்தூர்**: ஜாய் கிறிஸ்டோபர்; பாலின் சந்திரசேகரன்; சங்கீதா;|**சின்னாளப்பட்டி** : சலோமி;|**தர்மபுரி**: ரூத்;| **வெண்ணாம்பட்டி**: எப்சிபா;|**ஆழ்வார் திருநகரி**: பத்மாவதி;| **திண்டிவனம்**: சாராள் அறிவுச்செல்வி; ;|**திசையன்விளை** : ஜெயசீலிதாசன்;|**திருவாரூர்**: சரிதா;|**திருப்பூர்**:விக்டர்;|**நீலகிரி**: மஞ்சு;| **மடத்துக்குளம்** :ஆசா; பாலு; சிரண்யா; கிரேஸ்மேரி;|**மருதன்புத்தூர்** ; மரியாள் தங்கத்தாய்; இன்ஷா ராணி; ஸ்டெனிலா;| **திருவைகுண்டம்**: வனிதா; முத்துக்குமாரி,

## பரிபூரண ஜீவன் போட்டி எண் -96
## (கலாத்தியர், எபேசியர், பிலிப்பியர், கொலோசெயர்
## இருப்பிடத்துடன் விடை எழுதவும்

### I.கலாத்தியர்

1. யார் விசுவாசமுள்ள ஆபிரகாமுடனே ஆசீர்வதிக்கப்படுகிறார்கள்?
2. யார் அழிவை அறுப்பான்?
3. யார் மாயத்தினாலே இழுப்புண்டான்?
4. யார் தறிப்புண்டு போனால் நலமாயிருக்கும்?
5. யார் நித்திய ஜீவனை அறுப்பான்?
6. யார் இப்பொழுதிருக்கிற எருசலேமுக்குச் சரி?

### II.எபேசியர்

1. எது தேவனுடைய ஈவு?
2. எது நியாயம்?
3. எது தகும்?
4. எது தனக்குப் பக்திவிருத்தி உண்டாக்குகிறதற்கேதுவாகச் சரீர வளர்ச்சியை உண்டாக்குகிறது?
5. எது நமக்கு பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது?
6. எது நமக்குத் தைரியமும் திட நம்பிக்கையோடே தேவனிடத்தில் சேரும் சிலாக்கியமும் உண்டாயிருக்கிறது?

### III.பிலிப்பியர்

1. ____________ சந்தோஷப்படுங்கள்.
2. ____________ நிலைத்திருங்கள்.
3. ____________ நம்பிக்கையாயிருக்கிறேன்.
4. ____________ மிகவும் சந்தோஷப்பட்டேன்.

### IV.கொலோசெயர்

1. ஒருவருக்கொருவர் ____________ சொல்லாதிருங்கள்.
2. ஒருவனும் ____________ எச்சரிக்கையாயிருங்கள்.
3. ஒருவருக்கொருவர் ____________
4. ஒருவனும் ____________ உங்களை வஞ்சியாதபடிக்கு இதைச் சொல்கிறேன்.

விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் 8.12.2022

சரியான விடை எழுதி அனுப்புகிறவர்கள்
தங்கள் முழு முகவரியுடன் விடையை எழுதி அனுப்பவும்.



**விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி**

**Mrs.சாந்திபால்**
16/50 கொல்லம் மெயின் ரோடு, சீயோன் ஏ.ஜி. சர்ச்
SETC BUS டிப்போ அருகில், செங்கோட்டை - 627 809
தென்காசி (மாவட்டம்). செல் : 88077 18002

## வில்லிவாக்கம் மண்டல வாலிபர்கள் மற்றும் பெண்கள் முகாம்










## கரூர் மண்டல ஆண்கள் மற்றும் வாலிபர் முகாம்









## Pastors' Wives Coordinators Meeting





Registered News Paper Regd. No. 8206 / 62







BOOK POST

If Undelivered please return to
**PARIPOORANA JEEVAN**
30, Navalar Nagar, Madurai - 625 016. Ph: 0452 2301165